நா. சுந்தரலிங்கத்தின்

# விழிப்பு

பதிப்பாசிரியர்கள்

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

கயிலைநாதன் திலகநாதன்

உ
792
சுந்த

ஜனனி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. சுந்தரலிங்கத்தின்

# விழிப்பு

பதிப்பாசிரியர்கள்

**கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்**
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை

**திரு.கயிலைநாதன் திலகநாதன்**
விரிவுரையாளர், நாடகத்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**ஜனனி வெளியீட்டகம்**
**2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : விழிப்பு

விடயம் : நாடகமும் அரங்கியலும்

ஆசிரியர் : நா.சுந்தரலிங்கம்

பதிப்பாசிரியர்கள் : கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

: திரு.கயிலைநாதன் திலகநாதன்

பதிப்பு : 7 டிசெம்பர் 2007



பதிப்புரிமை : சுந்தரலிங்கம் அமிழ்தன் ©



வெளியீடு : ஜனனி வெளியீட்டகம்

புதுவளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை

அச்சு : குமரன் அச்சகம் மின்னஞ்சல்: kumbh@slt.lk

விலை : 100/-

| | | |
|---|---|---|
| Title | : | Villippu |
| Subject | : | Drama & Theatre |
| Author | : | N.Sundaralingam |
| Editors | : | Dr.Mrs.Ammankili Murugathas |
| | | Mr.Kailainathan Thilaganathan |
| First Edition | : | 7th December 2007 |
| Copyright | : | Suntharalingam Amilthan © |
| Publisehers | : | Jananee Publishers<br>Puthuvalavu, Polikandy, Valvettiturai |
| Printers | : | Kumaran Press (Pvt) Limited |
| Price | : | 100/- |


# முன்னுரை

## சுந்தாவை நினைவுகூரல்

நா. சுந்தரலிங்கத்தின் நாடகவரலாற்று முக்கியத்துவமும்
ஆள்நிலை நட்பும் பற்றிய ஒரு குறிப்பு

21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நின்றுகொண்டு 20ம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் நாடகவளர்ச்சியை பார்க்கும்பொழுது சில முக்கிய பெயர்கள் மைல்கற்களாக அமைவதைக் காணலாம். ஷ்பெஷல் நாடக மரபில் இலங்கைமயவாக்க பெரும்புள்ளியாக எம். வீ. கிருஷ்ணாழ்வார் விளங்குகின்றார். தழிழகத்திலே சம்பந்த முதலியார் தொடக்கிய நாடக நவீனமயவாக்கத்தின் இலங்கைநிலை மையப்-புள்ளியாக விளங்கும் கலையரசு சொர்ணலிங்கம், நவீன தமிழ் நாடகத்தை உருவாலும், பொருளாலும் ஈழத்துக்குரியதாக்கிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை அடுத்து பேராசிரியர் கணபதிபிள்ளை யின் நாடகங்கைள தயாரிக்கும் பணியுடன் தொடங்கி பின்னர், சரச்சந்திரவின் சிங்கள நாடக சுதேசமயவாக்க முன்னெடுப்பின் தமிழ்ப் பதிற்குறியாக ஈழத்துத் தமிழ் கூத்துமரபை மீட்டெடுத்த பேராசிரியர் வித்தியானந்தன் என நாடக முக்கியஸ்தர்களை இனங்காணும் பணியானது அடுத்து மூவருள் ஒருவித முழுமையைப் பெறுகின்றது.

கூத்துமரபு மீட்சியின் பொழுது அந்த ஆட்ட மரபின் அழகியலை எடுத்துக்காட்டி கூத்துமுறையின் பொருள்வட்டத்தை சற்று விரிவடையச் செய்த மௌனகுரு,

கூத்துமரபு வழங்கும் ஆட்ட அசைவியக்கத்தை இயல்பான தமிழ்நாடகத் தளமாக்கிக் கொண்டு 1960களில் மேற்குலகில் வளர்ந்து கொண்டிருந்த நாடகவாக்க புத்தாக்கங்களை நாடகமுறைமைகளாகக் கொண்டு முற்றிலும் புதிய விடயங்களை ஈழத்துத் தமிழ் நவீன அரங்குக்குக் கொண்டு வந்த நா. சுந்தரலிங்கத்தின் (சுந்தா), தாஸீஸியஸ் ஆகிய மூவருமாவர். இந்த வளர்ச்சி பிரவாகத்தினூடாகத்தான் சண்முகலிங்கம் மண்சுமந்தமேனியருடன் ஈழத்துத் தமிழ் நாடகப் பாய்ச்சலை மடைத்திருப்பி விடுகின்றார். (1984) சுந்தரலிங்கம், தாஸீஸியஸ், காரைசுந்தரம்பிள்ளை, கந்தவனம், இ.சிவானந்தன் முதலானோருடன் 1972, 74 இல் தாம் மேற்கொண்ட நாடக டிப்ளோமா கற்கைநெறிகாரணமாக, சிங்கள நாடக உலகின் வளர்ச்சிகளை சிங்கள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன நாடகச் சிற்பிகளின் வழியாகவே அறிந்துகொண்டனர். கூத்து மீட்பு தமிழ் நாடகத்தின் சண்முகலிங்கத்துக்கு முந்திய முன்னெடுப்புகளுக்கு சுந்தரலிங்கம், தாஸீஸியஸ் முன்நின்றனர். இவர்களிருவரும் கூத்தைத் தளமாகக்கொண்டு மேற்குலகில் நாடகமெழுதுகை, நடிப்பு ஆகிய துறைகளில் 60களில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை தமிழ்நிலைப்படுத்தித் தந்தனர். தாஸீஸியஸ், சுந்தரலிங்கம் இருவருமே கொழும்பில் ஜேர்மனிய, பிரித்தானிய நிறுவகங்கள் நடத்திய நாடகபட்டறைகளிலே பங்குகொண்டனர். இவ்வாறு இருவரும் ஒரே மூலகங்களிலிருந்து தங்கள் ஆக்கச் செயற்பாடுகளுக்கான உந்துதல்களைப் பெற்றுக்கொண்டனரெனினும் தங்கள் தயாரிப்புக்கள் என்றுவரும்பொழுது தங்களின் ஆளுமை இயல்புகளை பிரக்ஞை பூர்வமாகவும் அல்லாமலும் வெளிக்கொணர்ந்தனர். இவ்விருவர்களுள் சுந்தரலிங்கம் அடிப்படையில் "சமூக விமர்சன நோக்குடையவர்". உள்ளவற்றை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளாமல் கேள்விகளைக் கேட்பவர். ஆனால் இவற்றினூடே ஒரு மானிட கட்டொழுங்கு நிலவவேண்டுமென்று கருதுபவர்.

தாஸீஸியசும் நாடகத்தின் செய்துகாட்டற் பணிக்கு (Enactment) முக்கியத்துவம் கொடுப்பவர். அவருடைய நாடகங்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பெற்ற நாட்டிய நாடகம் போலவே அமையும். அகண்ட நடனப்பயில்வு காரணமாக இவரது நாடகங்களில் ஒரு கவர்ச்சிகரமான மோடிமைப்பாங்கு இருக்கும். அத்துடன் பாத்திர அசைவியக்கங்களில் நிறைந்தபுத்தாக்கம் (Innovativeness) இருக்கும். கருத்து நிலைச்சார்பிலும் (Ideological) பார்க்க உணர்ச்சி சித்திரிப்பையே முக்கியப்படுத்துவார். இவருடைய மிகப்பெரிய தயாரிப்புக்களாக கொள்ளப்படத்தக்கவை இரண்டு (மஹாகவியின்) கோடை, பொறுத்தது போதும் (ரஷ்ய நாடகம் ஒன்றின் தழுவல்). நா. சுந்தரலிங்கம் ஆளுமை நிலையிலும் கருத்துநிலை கண்ணோட்ட நிலையிலும் தாஸீஸியசிலிருந்து வித்தியாசப்பட்டவர். ஒரு கிண்டல் நோக்குப்பேர்வழி.

கிண்டல் நோக்குத் தன்மையென்பது அடிப்படையில் உலகின் பொருந்தாமைகளை இயைபின்மைகளைப் பார்க்கும் முறைமையே ஆகும். இந்த நோக்கினுள்ளும் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று முற்றிலும் எதிர்மறையாக (Negative)பார்க்கும் தன்மை. மற்றது இந்த பொருந்தாமைகள் இயைபின்மைகளை யதார்த்தமாக (Realist) ஆக பார்த்தல்.

அப்படிப்பார்க்கும்பொழுது தான் அந்த இயைபின்மைகளினூடே நேர்நிலையான (Positive) ஒரு முன்னெடுப்புக்கு இடமுண்டு. சுந்தா இரண்டாவது வகையைச் சார்ந்தவர். உலகின் முரண்பாடுகளைக் கண்டு



தனக்குள் சிரித்துக்கொள்ளும் பாங்குகொண்டவரெனினும் அதன் காரணமாக உலகை நிராகரிப்பவனல்லர். இந்தப்பண்பு சுந்தரலிங்கத்தின் நாடகவாக்க படைப்பாக்கத் திறனை (Dramaturgic Creativity) நிர்ணயித்துள்ளது எனலாம். சுந்தரலிங்கத்தின் நாடகங்கள் என இன்று எமக்கு அபசுரமும், விழிப்பும் கிட்டியுள்ளன. அபசுரம் உண்மையில் மேல்நாட்டு மரபில் பேசப்பட்ட (Absurd Play) அனர்த்த நாடகத்துக்கான நல்ல உதாரணமாகும். அனர்த்த நாடக முறைமை அடிப்படையில் மனிதர்கள் பற்றிய, உலகுபற்றிய ஓர் ஆழமான உண்மையைத் தெரிவிப்பவை. அனர்த்த நாடகத்தின் பிரதான பண்பு கருத்தற்றது, கருத்துக்கிடையாதது என சில மனித நடவடிக்கைகளை மேடையிலே காட்டும்பொழுது உண்மையில் நமது உலகின், வாழ்க்கையின் கருத்தில்லாத் தன்மையினையே (Abusurdity) காட்டுகிறோம். சுந்தாவின் அபசுரம் இத்தகைய ஒரு சித்திரிப்பே.

ஆனால் 'விழிப்பு' வாழ்க்கையின் முரண்பாடுகள் சமூகமாற்றத்துக்கு வேண்டிய விழிப்பை ஏற்படுத்துகின்றது. சுந்தாவென்ற கலைஞன் இங்கே ஒரு கருத்துநிலைத் துணிவுடன் போராளியாக மேற்கிளம்புகின்றான். நாடகத்தின் பொருள், நம்மை செயற்பாடுகளின் பால் தூண்டிவிடுகின்றது.

விழிப்பு எழுதப்பட்டுள்ள முறைமையை பார்க்கும்பொழுது அது நடிக்கப்படும் மேடை நம் கண்முன்னே நிற்கின்றது. பேசுகின்ற பாத்திரங்கள் மட்டுமல்லாது பேசாதிருக்கும் மேடைப்பொருள்களும் காட்சிகளும் பேசுகின்றன. நாடகவாக்கத்தில் ஒளியும், இசையும் பெறுகின்ற இடத்தினை, முக்கியத்துவத்தினை விழிப்பு எழுத்துரு நமக்கு உணர்த்துகின்றது.

சுந்தா ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தில் துணைத்தலைவராக சுந்தா இருந்தபொழுதுதான் எனக்கு பழக்கமானார். சுந்தாவும் சிவானந்தனும் (முருகையனின் தம்பி) இணைப்பிரியா தோழர்கள். அ.ந. கந்தசாமியின் 'மத மாற்றம்' சுந்தா துணைத்தலைவராக இருந்த வருடமே மேடையேற்றப்பட்டது. அது ஒரு அற்புதமான நாடகம். இந்துவாகவும் கிறிஸ்தவராகவுமிருந்த காதலர்கள் தங்கள் மதம் விவாகத்துக்கு தடையாக இருக்கக்கூடாது என்று எண்ணி மதம்மாறி ஆனால் மாறியமதத்தில் தமக்கிருந்த உணர்வாழம் காரணணமாக தங்கள் காதலையே தியாகம் பண்ணுகிறார்கள். கதாநாயகன் சந்நியாசியாகின்றார். கதாநாயகி கன்னியாஸ்திரியாகின்றாள். இவர்களுடைய நண்பர் பாத்திரம் சுந்தாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்களின் முட்டாள் தனங்களைப் பார்த்து ஆழமான குறிப்புக்களைக் கூறும் அற்புதமான பாத்திரமது. சுந்தா வெகு அற்புதமாக அந்தப் பாத்திரத்தைச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாடக காலத்திலிருந்தே (1963) நான் சுந்தாவின் நண்பனானேன். இந்த நட்புக் காரணமாக சிவானந்தனும், சுந்தாவும் நான் எழுதிய வானொலி தொடர் நாடகமாகிய, சிறாப்பர் குடும்பத்தில் நடித்தனர். 1973, 74 இல் கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீடம் ஒழுங்கு செய்திருந்த பட்டப்பின் நாடக டிப்ளோமா வகுப்பில் இவர்கள் மாணவர்களாயிருந்தனர். சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், திருச்செல்வம் சிவானந்தன், காரைசுந்தரம்பிள்ளை, கந்தவனம், திருச்செந்தூரன், சத்தார், குறமகள் ஆதியோர் வகுப்பில் இருந்தனர். ஏறத்தாழ 10 ஆண்டு-காலத்தில் சுந்தா தன் ஆளுமையில் மாற்றுரு பெற்றிருந்தார் என்பது எனக்கு அந்த வகுப்புக்குச் சென்றபோது தெரிந்தது. அடிப்படைக் கிண்டல் நோக்கினூடே இப்பொழுது ஒரு திட்டவட்டமான உலகநோக்குடைய கல்வியியலாளனை நான் சுந்தாவிற் கண்டேன்.

உண்மையில் என்னுடைய ஆசிரிய - வாழ்க்கையில் அந்த வகுப்புக்குச் செல்வது ஒரு முக்கிய சவாலாகவே இருந்தது. முதற்பட்ட மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தி வந்த ஒரு பின்புலத்தில் (மேற்-பட்ட நிலையில்) நண்பர்களாயிருந்தவர்களுக்கு வகுப்பெடுத்தல் என்பது புலமைநிலையில் ஒரு சிறியவிடயம் அல்ல.

அந்தக் காலத்திலேதான் சுந்தாவோடிருந்த நட்பு ஒருவரன் முறையான உறவு ஆகிற்று. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் நூல் செவ்விதாக்குனராக (Editor) பதவிவகித்த சுந்தா S.L.E.A.S எனும் உயர்கல்வி உத்தியோகத்தர் பதவிநிலைப்பட்டார். தனது கல்வி நிர்வாகத்துறையில் அவர் யாழ்ப்பாணக்கல்வி வலயப் பணிப்பாளராக கடமையாற்றி தனது சேவையை நிறைவு செய்தார். சுந்தா யாழ் கல்வி வலய பணிப்பாளராக இருந்தபொழுது ஒரு நாள் அவருடைய அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். அவர் என்னை அங்கு நடத்திய முறையில் அது எனக்கு இன்றுவரை மறக்க முடியாத பெருமிதம் நிறைந்த ஓர் அநுபவமாகவுள்ளது. சுந்தாவுக்கும் எனக்குமிருந்த உறவு மிகப்பெரியது. ஆழமானது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு பொறுப்பாகவிருந்த காலத்தில் நாடக கற்கை நெறிக்கான விரிவுரை-யாளராக சுந்தாவை வரவழைத்திருந்தேன். சுந்தாவின் அறிவாழமும் - கற்பித்தல் திறனும் மாணவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

ஒருமுறை ஒரு நியமனம் சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. சுந்தா என்பக்கத்து நியாயத்தை ஏற்கவில்லை, மனந்திறந்தே பேசினார். ஆனால், அந்நிலைப்பாட்டில் ஸ்திரமாக நின்ற அவரிடத்து நான் கொண்டிருந்த அன்பு, பெருமிதவியப்பு அதிகரித்துக் கொண்டே சென்றன. 1995இல் நான் கொழும்புக்கு வந்தபின்னர் சுந்தா தான் கொழும்புக்கு வருகின்ற நேரமெல்லாம் எங்களுடைய தொடர்மாடி



வீட்டுக்கு வந்தே செல்வார். இரண்டொரு தடவை உட்கார்ந்து கொள்ளாமலே "கொழும்புக்கு வந்த நான் உங்களைப் பார்க்காமல் போகக்கூடாது என்பதற்காக வந்தேன்" போய் வருகிறேன் என்று சொல்லி நின்ற நிலையிலேயே திரும்பிவிடுவார். சுந்தா நாடகத்துறையில் மாத்திரமல்ல மனிதநிலையிலும் உச்சங்களைத் தொட்டவர். சுந்தா போன்றவர்களுடைய நாடகவாக்க வாழ்க்கையில் ஏதோவொருவகையில் தொடர்புற்றிருந்தேன் என்பது இன்றைய எனது நிலையில் மனநிறைவைத்தருகின்ற ஒரு விடயமாகும். ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் சுந்தாவின் பெயர் நிலைத்து நிற்கும்.

அன்புடன்
**கார்த்திகேசு சிவத்தம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

நாடகமும் அரங்கியலும் என்ற பாடநெறி டிப்புளோமாவாக ஆரம்பிக்கப்பட்டு, உயர்தர வகுப்புப்பாட நெறியாகி, தற்போது ஆறாம் ஆண்டு தொடக்கம் க.பொ.த.சாதாரணதர வகுப்புவரை அழகியல் பாடங்களுள் ஒன்றாக ஆக்கப்பட்டுள்ளது. நடனம், சித்திரம், சங்கீதம் ஆகியவற்றுடன் நாடகமும் ஒருபாடமாக அங்கீகரிக்கப்பட்டமை மாணவரின் அதிர்ஷ்டமே.

அவ்வகையில் க.பொ.த.சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு நா.சுந்தரலிங்கத்தின் "விழிப்பு" ஒரு பாடநூலாக ஆக்கப்பட்டுள்ளது. அமரர் நா.சுந்தரலிங்கம் அவர்கள் நாடகம் டிப்புளோமாவாக ஆக்கப்பட்ட காலத்து முதல் தொகுதி மாணவர்களுள் ஒருவர். அந்தக்காலத்தில் சிவானந்தன், சுஹைர் ஹமீட், முருகையன், ம.சண்முகலிங்கம் போன்றோருடன் நா.சுந்தரலிங்கம் சேர்ந்து நாடகங்களினை இயக்கினார். நாடறிந்த நடிகர், நெறியாளர், நாடக எழுத்தாளர். அவர் "அபசுரம்" என்ற அபத்த நாடகத்தையும் எழுதியிருக்கிறார். "விழிப்பு நாடகம்" சமூகத்தில் காணப்பட்ட வேலையின்மைப் பிரச்சினையைப் பேசிய நாடகம்.

இந்த நாடகம் க.பொ.த.சாதாரண தரமாணவருக்கு இலங்கைத் தமிழ் நாடகவரலாற்றின் ஒருகாலகட்டத்து நாடகங்களின் பதச்சோறாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

இந்நாடகம் பாடநூலாக ஆக்கப்பட்டாலும் மாணவருக்கான பிரதிகள் கிடைப்பதரிதாகவே உள்ளது. எனவேதான் மாணவர் தேவையைக் கருத்தில் கொண்டு இதனை மீள் அச்சு செய்யத் துணிந்தோம். அவ்வாறு மீள் அச்சு செய்யமுயன்று அதற்கான அனுமதியைத் தருமாறு திருமதி சுந்தரலிங்கத்தைக் கேட்டுக் கொண்ட போது அவர் பெருமனதுடன் சம்மதம் தந்தார். அவருக்கு எமது நன்றிகள்.

மேலும் இந்நூலைத் திறம்பட அச்சிட உதவிய குமரன் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பதிப்பாசிரியர்கள்
**கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்**
**திரு. கைலைநாதன் திலகநாதன்**
*1.11.2007.*

**சுந்தரலிங்கத்தின்**

# விழிப்பு

**பாடல்கள்**

**இ.முருகையன்**

### முதல் மேடையேற்றம்

எழுதியது : *1969 -10-07*

முதல் மேடையேற்றம் : *1975-11-21*

இடம் : லும்பினி அரங்கு, ஹவ்லொக் நகர், கொழும்பு.

தயாரிப்பு : கூத்தாடிகள்

நெறியாள்கை : நா.சுந்தரலிங்கம்

நாடக மாந்தர் :

| | |
|---|---|
| **சந்திரன்** | பட்டதாரி, வேலையில்லாதவன். |
| **கார்த்திகேசு** | சந்திரனின் தகப்பன். அரசாங்கத்தில் உயர் உத்தியோகம் வகித்தவர். செல்வாக்கானவர் எனப் பலராலும் மதிக்கப்படுபவர். |
| **சிவக்கொழுந்து** | சந்திரனின் பெரிய தகப்பன்.கார்த்திகேசுவை விடப்பதினைந்து இருபது வயது மூத்தவர். கார்த்திகேசுவின் சகல குடும்பவிஷயங் களுக்கும் முதல்வர். |
| **செல்வி** | சந்திரனின் மனைவி. G.C.E (உயர்தரம்) வரை படித்தவள். வசதியான குடும்பத்தில் பிறந்தவள். |
| **சிற்றம்பலம்** | சந்திரனின் மாமன். ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர். சுமாரான வாழ்க்கை வசதிகள் பெற்றவர். |

மற்றும்

*கார்த்திகேசுவின் மனைவி.*
*பரீட்சார்த்திகள் 12 பேர்,*
*தொழிலாளர்கள் 6 பேர்,*
*காயக்காரர்கள் 3 பேர்.*

*நீதி அரசர்கள் 3 பேர், பியோன்*
*படித்தவர்கள் 4 பேர், டொக்டர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் அங்கம்

### காட்சி : 1

சைக்குளோறாமாவின் முன் ஓர் இருப்பறையின் நெடிய சுவரைக் குறிக்கும் ஒரு சட்டப்படல். அச்சட்டப்படலின் வலப்புற அரையில் ஜன்னலைக் குறிக்கும் இடைவெளி. இடப்புற அரையில் வெளிவாசற் கதவைக்குறிக்கும் இடைவெளி, ஜன்னலுக்கு ஊடாக இரண்டொரு மரங்கள் வெளியே நிற்பதை மண்டபத்திலுள்ளோர் காணக்கூடியதாக இருக்கிறது. ஜன்னலுக்கு முன்னால் நோயாளி படுத்திருக்கும் ஒரு கட்டில். தலைமாட்டிற்குச் சற்றுத்தள்ளி ஒரு ஸ்ரூல். அதிலே நோயாளிக்கு வேண்டிய சாமான்கள் வகையறா. கால்மாட்டில் ஒரு நாற்காலி. முன்மேடை இடப்புறத்தை அண்டி மூன்று பிரம்பு நாற்காலிகள், ஒரு ஸ்ரூல்.

மண்டபத்து ஒளி மங்கி, அரை மங்கலுக்கு வந்ததும் வாத்தியக் குழுவினரின் இசை ஆரம்பிக்கிறது. இந்த நாடகத்திற்கு அமைக்கப்பட்ட இசையின் சிறுசிறு பகுதிகளைத் தொகுத்து வாசித்தல் நல்லது. இசை முடிவை அணுக மண்டபத்து ஒளிமேலும் மங்கி இருட்டாகிறது. இந்த இருட்டிலே இசை சில வினாடிகள் நீடித்து சோகமாக மாறுகிறது. திரை மெல்ல விலகுகிறது.

மங்கிய ஒளி மேடையிலே பாய்ச்சப்படுகிறது. இந்த ஒளியின் மத்தியிலே கட்டிலில் ஒரு நோயாளி படுத்திருக்கிறாள். அவள்தான் தங்கம்மா. கடும் நோய், இன்றோ நாளையோ என்ற நிலை. அவளைச் சுற்றி அவளது கணவன் கார்த்திகேசு, அவரது தமையன் சிவக்கொழுந்து, மகன் சந்திரன் மற்றும் ஒரு டொக்டர் இன்னும் இரண்டொருவர் நிற்கின்றனர். திரை விலகும்போது இவர்கள் எல்லோரும் "சிலை"யாக (Still) இரண்டு மூன்று வினாடிகள் நின்று, டொக்டர் இந்நிலையைக் கலைக்க மற்றவர்களும் கலைத்து அவருக்கு வேண்டிய உதவிகளைச்செய்கின்றனர். சந்திரன் நோயாளியின் தலைமாட்டடில் நின்று தாயின் நெற்றி வியர்வையை ஒற்றியபடியும் டொக்டரைப் பார்த்தபடியும் நிற்கிறான். டொக்டருக்குப் பின்புறமாகச் சற்று முன்னோக்கி கார்த்திகேசுவும், சிவக்கொழுந்தும் நிற்கின்றனர். கார்த்திகேசு கவலைதோய்ந்த முகத்தோடு நோயாளியைப் பார்த்தபடி நிற்க, சிவக்கொழுந்து இடையிடையே டொக்டரை அணுகி ஏதோ கதைத்துக் காட்டுவதும் தலையாட்டுவதுமாய் நிற்கிறார். டொக்டர் உடல் வெப்பம் பார்ப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசி போடுவதற்கான ஆயத்தம், ஊசிபோடுவது போன்ற பாவனைகள் செய்யப்படுகின்றனவே தவிர வார்த்தைகள் வெளிவரவில்லை.

இப்பாவனைகள் சிறிதுநேரம் நீடித்தபின் டொக்டர் கடுதாசியில் சில மருந்து வகைகளை எழுதி அதைச் சிவக்கொழுந்துவிடம் கொடுத்து அதைப்பற்றிய விளக்கமும் கூறிப் புறப்படுகிறார். டொக்டரோடு சிவக்கொழுந்துவும் கூடப் போய் வழி அனுப்பி வைக்கிறார். இந்த இடை நேரத்தில் சந்திரனையும் கார்த்தி-கேசுவையும் தவிர மற்றவர்கள் மேடையினின்றும் வெளியேறு-கிறார்கள். சந்திரன் நோயாளியைக் கவனிப்பதிலும் ஸ்ரூல்மீது இருக்கும் சாமான்களை ஒழுங்கு செய்வதிலும் கவனமாயிருக்க கார்த்திகேசு நோயாளியின் போர்வையைச் சரிசெய்து அவளைப் பார்த்தபடியே நிற்கிறார். இந்த நேரத்தில் டொக்டரை வழியனுப்பச் சென்ற சிவக்கொழுந்து திரும்பி வருகிறார். வந்து கார்த்திகேசுவை அழைத்தபடி முன்மேடை வலப்புறத்திற்கு வருகிறார். சந்திரன் கட்டிலருகே நின்று தாயைக் கவனித்தபடி நிற்கிறான். சிவக்கொழுந்து டொக்டர் எழுதிக்கொடுத்த துண்டைப் பார்த்தபின் அதைக் கார்த்திகேசுவிடம் கொடுக்கிறார். கார்த்திகேசு அதை வாங்கி, படியாது கையில் பிடித்தபடியே மனைவியைத் திரும்பிப் பார்த்து பின்னர் சிவக்கொழுந்தரை நேரே பார்க்காது ஒரு கோணத்தே பார்வையைப் பதியவிட்டு,

கார்த்தி : (கவலையோடு) இந்த முறை.... நான் நினைக்கேல்லை...

சிவக் : அப்பிடியான வியாதி. கூடிக்குறையிறதுதான் அதுவின்ரை குணம். சொல்ல ஏலாது எண்டுதான் டொக்டரும் சொல்லுகிறார்.

கார்த்தி : (விரக்தியாக) நெடுக அது கூடிக் குறைஞ்சுகொண்டுதான் இருக்கப்போகுதோ அண்ணை, ஒருநாளைக்கு அது கூடினால் பிறகு கூடினதுதான்.

சிவக் : அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. ஏலுமானவரை தெண்டிச்சுப் பார்க்கிறதுதான். பிறகு எல்லாம் அதுகளின்ரை தலைவிதிப்படி.

கார்த்தி : (யோசித்து) எனக்கென்னவோ அண்ணை.... மனம்... ஒரே அங்கலாய்ப்பாய்க் கிடக்குது. அவளின்ரை சீவன் போறதுக்கிடையிலை அவளின்ரை ஆசை ஒண்டை



நிறைவேற்றி வைக்கலாம் எண்டால்... ... ... சந்திரன் என்ன சொல்லுவான் எண்டுதான் யோசிக்கிறன்.

சிவக் : ஏன் சந்திரன் மாட்டன் எண்டு சொல்லக் கூடிய விஷயமோ?

கார்த்தி : இல்லை, சிலவேளை அவன் மாட்டன் எண்டு சொன்னாலும் சொல்லிப்போடுவான் எண்டுதான் யோசிக்கிறன். போனமுறை... ... ... இப்பிடித்தான் ... ... தங்கத்துக்கு ஒருக்கால் கடுமைப்படுத்திச்சு. நீங்களும் நிண்டனீங்கள்தானே. செல்லனை வளவாலை எழுப்பிற விஷயமாய் அட்வக்கேட்டைச் சந்திக்கவேணும் எண்டு போட்டுப் போட்டியள்...

சிவக் : ஓ... ... ... அது இப்ப நடந்து பத்து மாசம் ஆச்சுதே.

கார்த்தி : ஓ... ... ... அப்ப இவன் சந்திரனுக்கும் யூனிவேசிற்றியிலை கடைசிச் சோதினை... அவனும் இஞ்சை இல்லை...

(இனிவரும் சம்பவம் நினைவுறுத்தல் காட்சியாக அமைகிறது. இது நடக்கும்போது முன்னர் நடந்த சம்பவங்களைக் கார்த்திகேசு Flash back பாவனையோடு விவரிக்கிறார். ஒளியைத் தகுந்தபடி மேடையில் மாற்றி உபயோகிப்பதால் இந்த நிலைமாற்றத்தை உருவாக்கலாம்)

கார்த்தி : நீங்களும் போட்டியள்.டொக்டரும் ஊசி போட்டுட்டு அப்பத்தான் போனவர். தங்கம் கட்டிலிலை படுத்திருக்கிறாள். அவளுக்கு நித்திரை இல்லை. அங்காலையும் இங்காலையும் உடம்பை அலட்டிக்கொண்டு கிடக்கிறாள்... ... பிறகு... ... என்னை வரச்சொல்லிக் கூப்பிட்டாள்... ... நான்... ... கிட்டப்போய்... ... "என்ன" எண்டு கேட்டன். கதிரையைக் காட்டி... ... அதிலை... ... தன்னைக் கொஞ்ச நேரம்... ... இருத்திவிடச் சொன்னாள். மெல்லமாய்... ... அவளைக் கைத்தாங்கலாய்ப் பிடிச்சு... ... ... அதிலை... ... இருத்திவிட்டன். நெடுக அவளுக்கு வருத்தம் வாறதுதானே. எண்டாலும் ஒரு நாளும்... ... அவள் கவலையாய் இருக்கிறேல்லை... ... ஆனால் அண்டைக்கு மட்டும்... ... பேய் அறைஞ்சவள் மாதிரி அவள் இருந்தாள்... "ஏன் தங்கம்... ... ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறாய்"... ... எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டன்... ... "ஒண்டுமில்லை"... ... எண்டு போட்டுப் பேசாமல்... ... கொஞ்ச நேரம்... ... இருந்தாள். பிறகு... ... "சந்திரன் எப்ப வருவான்"... ... எண்டு என்னட்டைக் கேட்டாள்... ... "இப்ப அவனுக்குக் கடைசிச் சோதனை நடந்துகொண்டிருக்குது... ... ... ஏன்?... ... "தந்தி அடிச்சுக் கூப்பிடட்டோ?"... ... எண்டு கேட்டன்........." வேண்டாம்" எண்டு தலையை ஆட்டிப்போட்டு....பெருமூச்சு விட்டாள் எனக்கு ... என்னமோ... ... அவள் மனதுக்கை ஒரு பெரிய பாரத்தைச் சுமந்துகொண்டு இருக்கிறாள்... ... எண்டுதான்பட்டுது... ... "ஏன் தங்கம் மனதுக்கை... ... எதையாவது வைச்சிருக்கிறதாலை... ... ஆருக்கு... ... என்ன லாபம்... ... அதை எனக்குச் சொன்னால்தானே... ... ... நான் என்னாலை ஏலக்கூடியதைச் செய்வன்... ... நீ... ... உப்பிடியே... ... எல்லாத்தையும் ... ... மனதுக்குள்ளை பூட்டிப் பூட்டி வைக்கிறதாலைதான்... ... அதெல்லாம் உன்னைக்... ... கொஞ்சம் கொஞ்சமாய்... ... அரிக்குது"... ... எண்டு சொன்னன். அவள் கொஞ்ச நேரம்... ... பேசாமல் இருந்தாள்... ... பிறகு... ... "ஒண்டுமில்லை... சந்திரனுக்கு ஒரு கலியாணம் செய்தால் என்ன?... ... ... நான் சாக முந்தி அதை என்ரை கண்ணாலை... ... ஒருக்கால்... ... பார்க்கவேணும் எண்டு ஆசையாய் இருக்குது" எண்டு சொன்னாள்........"அதுக்கென்ன... சோதினை முடிஞ்சு.... சந்திரன் வந்த உடனே.... செய்வம்" எண்டு சொன்னன்..... என்ரை சொல்லிலை... ... அவளுக்கு நம்பிக்கை உண்டாகேல்லைப் போலை... ... கொஞ்சநேரம் இருந்து யோசிச்சாள்... ... பிறகு... ... இரண்டு மூண்டு பகுதிகளைச் சொல்லி அங்கை கேட்டுப் பாக்கச் சொன்னாள்... ... "ஓம்"... ... எண்டு நான் சொன்னன்... ... அதுக்குப் பிறகுதான்... ... "நித்திரை வருகுது... ... கட்டிலடிக்குப் பிடிச்சுவிடுங்கோ... ..." எண்டு சொன்னாள்... ... மெல்லப் பிடிச்சு... கட்டிலடிக்குக் கொண்டு போய்ப்... ... படுக்க வைச்சன். படுத்துக்... ... கொஞ்ச நேரத்திலை... ... நிம்மதியாய் நித்திரையாய்ப் போனாள். (நினைவுறுத்தல் முடிவு)

அப்பத்தான் நான் யோசிச்சன் இந்தக் கவலை அவளை எவ்வளவு தூரம் வாட்டிப் போட்டுது எண்டு.



சிவக் : நீ இதைப்பற்றி எனக்கு ஒண்டும் சொல்லேல்லையே.

கார்த்தி : சொல்லலாம் எண்டுதான் முதல் யோசிச்சன். பிறகு நீங்கள் பேசினாலும் பேசிப் போடுவியள் எண்டு பேசாமல் இருந்திட்டன். நல்ல காலம் தங்கத்துக்கு பிறகு சுகம் வந்திட்டுது.

சிவக் : (சிந்தனையோடு) ம்... அப்ப நான் நினைக்கிறன்.... இப்பவும் அவளுக்கு அந்தக் கவலைதான் இருக்கவேணும். அதுதான் அவள் நிம்மதியாய்க் கண்ணை மூட ஏலாமல் அவதிப்படுகிறாள்... ம்... சந்திரன் இதுக்கு என்ன சொல்லுறான்.

கார்த்தி : றிசல்ட் வந்து எட்டு மாசம் ஆச்சுது. உத்தியோகம் இல்லை... உத்தியோகம் இல்லை எண்டு எரிஞ்சு கொண்டு திரியிறான். அதுதான் இதைப் பற்றிக் கேக்க நான் யோசிக்கிறன்.

சிவக் : இதிலை யோசிக்கிறதுக்கு என்ன இருக்குது. தாய் நிம்மதியாய்க் கண்ணை மூடுறது முக்கியமோ? உத்தியோகம் முக்கியமோ? அவன்ரை உத்தியோகத்தைப் பற்றி உனக்குத் தெரிஞ்ச ஆக்களிட்டைச் சொல்லியிருக்கிறாய் தானே. நீ அவங்களுக்குச் செய்த உதவிகளுக்கு இதை அவங்கள் உனக்குச் செய்ய எங்கை எண்டு இருப்பாங்கள்.... பாப்பம்... அப்பிடித்தான் இல்லாட்டிலும் பறுவாயில்லை... ஒரு றெண்டொண்டை இளக்க எல்லாம் சரிவரும்.

கார்த்தி : உத்தியோகத்தைப் பற்றி கவலை இல்லை அண்ணை. கனபேர் புறோமிஸ் பண்ணி இருக்கினம்.

சிவக் : சரி... (யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவராய்) மிச்ச அலுவல்களை நான் பார்க்கிறேன்.

(மேற்சொன்ன வசனத்தைச் சிவக்கொழுந்து பேசியபடியே கார்த்திகேசுவையும் அழைத்துக்கொண்டு கட்டிலடிக்குப் போகிறார். அங்கே சந்திரன் தாய்க்கு தோடம்பழச்சாறு கொடுத்துக்கொண்டிருக்கிறான். தகப்பன் கிளாசை மகனிடமிருந்து வாங்கித் தான் அதைப் பருக்குகிறார். சிவக்கொழுந்து சந்திரனை அழைத்தபடி மீண்டும் முன்மேடை வலப்புறத்துக்கு வருகிறார். இவர்கள் கதைக்கத் தொடங்கியதும் கார்த்திகேசு உள்ளே போகிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக் : சந்திரன்... ... அம்மாவின்ரை நிலைமை கொஞ்சம் கஸ்டம் எண்டுதான் டொக்டர் சொல்லுறார். இன்னும் கொஞ்ச நாளைக்குத் தாக்குப் பிடிக்கிறதெண்டால் மருந்தாலை ஒண்டும் செய்ய ஏலாதாம்... ... அது மனதாலைதான் செய்ய ஏலும் எண்டு டொக்டர் சொல்லுறார்.

சந்திரன் : நீங்கள் என்ன பெரியையா சொல்லுறியள்.

சிவக் : (யோசித்துப் பேசும் பீடிகையோடு) அம்மாவுக்கு இருக்கிற வியாதியை விட மனக்கவலைதான் இப்ப பெரியவியாதியாய்க் கிடக்குது. ஐயாட்டையும் கேட்டன். அவரும் அதைத்தான் சொல்லுறார்.

சந்திரன் : (ஆச்சரியத்தோடு) அம்மாவுக்கு அப்பிடி என்ன மனக்கவலை பெரியையா?

சிவக் : உனக்கொரு கலியாணத்தைச் செய்து பாக்கிறதுக்கிடையிலை தான் கண்ணை மூடிவிடுவாளோ எண்டு அவள் கவலைப்படுகிறாள். இந்தக் கவலையாலையே அவள் அரைவாசி செத்துப் போனாள். (யோசித்து) ஏன்ரா சந்திரன் நீ ஒரு கலியாணத்தை முடிச்சால் என்ன?

சந்திரன் : என்ன பெரியையா நீங்கள்... ... உழைக்கிறதுக்கு வழியைக் காணயில்லை, கலியாணம் இல்லாததுதான் குறை.

சிவக் : இஞ்சார், உத்தியோகத்தைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். அது ஐயா தன்ரை சிநேகிதரிட்டை சொல்லி வைச்சிருக்கிறார். நானும் அங்கை சொல்லி வைச்சிருக்கு. இண்டைக்கோ நாளைக்கோ அது கிடைக்கும். ஆனால் அம்மாவின்ரை விஷயம் அப்பிடி இல்லை. ஒருக்கால் கண்ணை மூடினால் மூடினதுதான். அதுதான் சொல்லுறன், ஆசையோடை அவளை ஏங்கிச் சாக வைக்காதை பிறகு நீதான் மனவருத்தப்படுவாய்.

சந்திரன் : இதிலை அம்மா மாத்திரம் விருப்பப்பட்டு என்ன இருக்குது பெரியையா. ஐயாவுமெல்லோ சம்மதிக்கவேணும்.

சிவக் : அம்மாவுக்கு விருப்பமெண்டால் அவரென்ன வேண்டாம் எண்டே சொல்லப்போறார்?



சந்திரன் : அதுக்கில்லை....

சிவக் : அவருக்கு அம்மாவின்ரை கவலை ஒரு பக்கம். அம்மாவின்ரை ஆசையை நிறைவேற்றுறதுக்கு வழிதெரியாத கவலை மற்றப்பக்கம். இரண்டுக்கும் இடையிலை நிண்டு அவர் அந்தரப்படுகிறார். இதெல்லாத்தையும் தீர்த்துவைக்கக் கூடியவன் நீயொருத்தன்தான். நீ படிச்சனி, உனக்கு எல்லாம் வடிவாய் விளங்கும். அதுதான் சொல்லுறன்.

சந்திரன் : (பேசாமல் நிற்கிறான்)

சிவக் : என்ன பேசாமல் நிக்கிறாய்.

சந்திரன் : இல்லைப் பெரியையா... ... ...

சிவக் : இஞ்சார்... ... இவ்வளவு பாடும் அவள் உனக்காய்த்தான் பட்டவள். ஐயாவுக்குப் பட்டதிலையும் பாக்க அவள் உன்னோடைதான் கூடப் பாடுபட்டிருக்கிறாள், உன்ரை உழைப்பை அவள் அனுபவிப்பாள் என்பது ஐமிச்சம். நான் நினைக்கேல்லை. அதுதான் சொல்லுறன். அவள் உயிரோடை இருக்கேக்கை உன்னாலை செய்யக்கூடியது இது ஒண்டுதான்.

சந்திரன் : எனக்கென்னவோ பெரியையா... ... இந்த யோசனை பிழைபோலத் தெரியுது.

சிவக் : இத்தினை வயசு வந்த பிறகும் எங்களுக்கு எது சரி எது பிழை எண்டது விளங்குவதில்லை. உனக்கு இப்பவே எல்லாம் விளங்குது என்ன? நான் சொல்றதைக் கேள். அந்தச் சீவன் கொஞ்சம் நிம்மதியாய்க் கண்ணை மூடவேணுமெண்டால் நான் சொல்லுறபடி செய்.

(இந்த நேரத்தில் கார்த்திகேசு அங்கே வருகிறார். அவரைக் கண்டதும் சந்திரன் கட்டிலடிக்குப் போய்த் தாயைக் கவனிக்கிறான். சிவக்கொழுந்துவுக்கும் கார்த்திகேசுவுக்கும் சம்பாஷனை தொடருகிறது)

கார்த்தி : அவனுக்கு விருப்பமில்லாட்டில் தெண்டியாதையுங்கோ அண்ணை.

சிவக் : விருப்பமில்லை எண்டு அவன் உனக்குச் சொன்னவனோ? உத்தியோகத்தை எடுத்துக் கொடுத்தால் வாயைப்பொத்திகொண்டு கலியாணம் செய்வான்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யோசித்து) இவனுக்கு உத்தியோகம் கிடைக்கும் வரைக்கும் அவள் கண்ணை முழிச்சுக் கொண்டு இருக்க மாட்டாள். அதுதான் யோசிக்கிறன்.

கார்த்தி : அப்பிடியெண்டால் என்னண்ணை செய்யிறது.

சிவக் : ம் (யோசித்து) அது நான் அவனுக்கு எல்லாம் வடிவாய்ச் சொல்லியிருக்கிறன். அவன் கேப்பான். அவசரப்படாமல் ஒரு நல்ல பகுதியிலை அவனை இறக்கவேணும். நான் சிற்றம்பலத்தாரோடை கதைக்கிறன்.

கார்த்தி : தங்கத்துக்கும் அவையிலை நல்ல பிடிப்பு. நீங்கள் எல்லாத்தையும் விளங்கப்படுத்திக் கேளுங்கோவன்.

சிவக் : (யோசிச்சுய் முடிவுக்கு வந்தவராய்) ம்... நான்அதைக் கேக்கிறன்... (கார்த்திகேசுவையும் அழைத்துக் கொண்டு கட்டிலடிக்குப் போய்) நீ அந்த மருந்துகளை வாங்கிக் கவனமாய்க் குடு (சந்திரனைக் கூப்பிட்டு) அப்ப சந்திரன் நான் போட்டுப் பிறகு வாறன்.

சந்திரன் : ஓம் பெரியையா.

சிவக் : நான் சொன்னதுகளை ஒருக்கால் வடிவாய் யோசிச்சுப் பார்... ம்... யோசிக்கிறதுக்கு என்ன இருக்குது. எல்லாம் அம்மாவின்ரை நன்மைக்குத்தானே. (சந்திரன் பேசாமல் நிற்கிறான். கார்த்திகேசுவிடம்) சரி அப்ப இரு நான் வாறன்.

கார்த் : ஓம் அண்ணை, (சிவக்கொழுந்தை வழி அனுப்புகிறார்)

(மகன் தலைமாட்டில் நின்றபடி தாயைக் கவனிக்கிறான் கார்த்திகேசு திரும்பி வந்து கதிரையை எடுத்து மேடை உள் ஓரத்தில் வைத்துவிட்டு மனைவியின் போர்வைகளைச் சரி செய்தபடி காலடிக்கு வருகிறார். ஒளி மங்கத்தொடங்குகிறது. இருட்டானதும் இருவரும் கட்டிலைத் தூக்கியபடி உள்ளே போகிறார்கள். சாமான்கள் உள்ள ஸ்ரூலும் அப்புறப்படுத்தப்படுகின்றது. ஜன்னலோடு கூடிய சட்டப்படல் உள்ளே மறைகின்றது.



**முதலாம் காட்சி முடிவு**

## காட்சி-2

முதலாம் காட்சி முடிவிலுள்ள இருட்டின்போது மேற்கூறிய மேடைப்பொருட்கள் அப்புறப்படுத்தப்படும் அதே வேளையில் இரண்டாம் காட்சிக்குரிய பொருட்கள் விடப்படுகின்றன. இரண்டாம் காட்சி மேடையின் இடப்புற அரையில் நடைபெறுகிறது. பின்னணியில் கதவோடு கூடிய சட்டப்படல் இருக்கின்றது. சைக்குளோறாமாவிற்கும் சட்டப்படலுக்கும் இடையே உள்ள இடைவெளி உள்ளறையைக் குறிக்கும். இதை வெளிக்கொணருவதற்காக இரண்டொரு சாமான்கள் அங்கே வைக்கப்பட்டுள்ளன. சட்டப்படலுக்கு முன்னால் இருப்பறை. இருப்பறையிலே மூன்று பிரம்பு நாற்காலிகளும் சிறிய ஸ்ரூலும் வைக்கப்பட்டுள்ளன. மேடையின் வலப்புற அரை வெற்றாக இருக்கிறது. காட்சி ஆரம்பமாகும் போது மேடை முழுவதும் மங்கலான ஒளியும் பிரம்பு நாற்காலிகளைச் சுற்றி ஒளிப்பொட்டும் பாய்ச்சப்படுகின்றன. பாய்ச்சப்படும்போது சிவக்கொழுந்தும் சிற்றம்பலமும் நாற்காலிக்கு முன்னால் நிற்கின்றனர்.

சிற்றம் : இருங்கோ.... இருங்கோ.... (கதவை நோக்கி) செல்வி... இஞ்சை சிவக்கொழுந்து மாமா வந்திருக்கிறார்.

சிவக் : (இருந்து கொண்டே) வீட்டுப் பொறுப்பெல்லாம் இப்ப செல்வியோடை போல கிடக்கு.

சிற்றம் : அதுதான் பெரியதலையிடியாக் கிடக்குது, பாருங்கோ, உடம்பைச் சும்மா அலட்டாமல் பேசாமல் இரு எண்டாலும் கேக்கிறாளில்லை. அது அப்பிடி இருக்கவேணும்... ... இது இப்பிடி இருக்கவேணும்... ... அதிலை ஊத்தை பிரட்டக்கூடாது... ... இதை அரக்கி வைக்கக்கூடாது எண்டு ஒவ்வொரு நாளும் மற்றவையோடை சண்டைதான். இப்ப வீடு அவவின்ரை பொறுப்பு.

சிவக் : (ஆமோதித்து) அதுதான் நல்லது... ... எங்கை மற்றவை ஒருத்தரையும் காணயில்லை.

சிற்றம் : எல்லாரும் பள்ளிக்கூடம் போட்டினம்.

செல்வி : (கதவால் உள்ளே வந்து) என்ன மாமா... .... கனகாலத்துக்குப் பிறகு... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக் : (சிரித்தபடி) உன்னைப் பாத்திட்டுப் போவம் எண்டுதான் வந்தனான்.

செல்வி : (சிரித்துக்கொண்டே) ஆ... ... அப்ப பின்ன இருந்துகொள்ளுங்கோ... ... இப்ப வந்திடுறன். (உள்ளே போகிறாள்)

சிற்றம் : இப்ப ஏன் நீங்கள் அடிக்கடி இஞ்சாலைப்பக்கம் வாறேல்லை.

சிவக் : இவன் செல்லனைக் காணியாலை எழுப்பிறதுக்கு ஓடித் திரிஞ்சாப்போலை... ...

சிற்றம் : ஏன் அவன் செல்லன் நல்ல குணமானவனே... ...

சிவக் : ஓம்... ... அவன் ஆள் பழுதில்லை. தெரியாதே இந்தப் Paddy Lands Act ஐ... இப்ப எல்லாக் குறிச்சிகளுக்கும் மெல்லமெல்லக் கொண்டு வாறாங்கள். அதுதான் பிறகேன் வில்லங்கப்படுவான் எண்டு யோசிச்சுப்போட்டு... ...

சிற்றம் : ஆனால் பாருங்கோ... ... செல்லன் இருக்கிறது நெற்காணி இல்லையே?

செல்வி : இல்லை மாமா... ... நீங்கள் கதையுங்கோ. எனக்கு வேலை இருக்குது. (சொல்லியபடியே கோப்பையையுந் தட்டையும் எடுத்துக் கொண்டு உள்ளே போகிறாள். போனதும்)

சிவக் : விஷயம் என்னெண்டால் சிற்றம்பலம்... ... தங்கம்மா கனகாலம் சீவிப்பாள் எண்டது ஐமிச்சம். இந்த முறை தப்பினாளெண்டால்... ... ஆகக் கூடினது ஒரு வருசம்.

சிற்றம் : என்ன கான்சரோ (Cancer)

சிவக் : இல்லை... இல்லை... கான்சர்மாதிரி... அதுதான். மனிசிக்கொரு ஆசை... என்னெண்டால்... தான் சாகிறதுக்கிடையிலை... அவன் சந்திரனுக்கு எங்கையெண்டாலும் ஒரு நல்ல இடத்திலை ஒரு கலியாணம் செய்து வைக்கவேணும் எண்டு. இரண்டு மூண்டு பகுதி வந்து கேட்டவைதான்... எண்டாலும்... ... எனக்குப் பிடிக்கேல்லை. (யோசித்து) ஏன் சிற்றம்பலம் செல்விக்கு அவனைச் செய்தால் என்ன?



சிற்றம் : ம்.... (பேசாமல் யோசனையில் ஆழ்கிறார்)

சிவக் : ஏன் உனக்கு விருப்பமில்லையோ?

சிற்றம் : (தயங்கியபடியே)விருப்பமில்லை எண்டில்லை... ... மகனுக்கு இன்னும் ஒரு உத்தியோகமுமில்லை...-அதுதான்...

சிவக் : அதைப்பற்றி நீ ஏன் யோசிக்கிறாய். அவன்ரை சோதினை (Exam) மறுமொழி வந்து இப்ப என்ன ஆறுமாசம்தானே ஆகுது. அதுக்கிடையிலை எனக்கிந்தக் காணி வழக்கு வந்திட்டுது. தங்கம்மாவும் சுகமில்லாமல் படுத்திட்டாள். அவன் சந்திரன்ரை விஷயத்தைப் பாக்க எனக்கும் தகப்பனுக்கும் நேரமில்லாமல் போச்சுது.

சிற்றம் : உத்தியோகம் இல்லாதவரைச் செய்ய... ... செல்வி என்ன சொல்லுகிறாளோ.

சிவக் : உன்ரை கஸ்ட நஸ்டம் அவளுக்கென்ன தெரியாதே. சொல்லி விளங்கப்படுத்திறதுதான்.

சிற்றம் : கடவுளே எண்டு எனக்கொரு கஸ்டமும் இல்லைப்பாருங்கோ. ஒரு நல்ல இடத்திலை என்னாலை அவளைக் கட்டிவைக்க ஏலும்.

சிவக் : அது எனக்குத் தெரியும் சிற்றம்பலம், நான் யோசிக்கிறது என்னெண்டால்... அவனுக்கு ஒரு வேலை எடுத்துக்குடுக்கிறது ஒரு கஸ்டமான காரியம் இல்லை... .... வேலை கிடைச்ச உடனை அவனுக்கு இருக்கிற மரியாதை கூடுமே தவிரக் குறையாது. இப்ப எண்டால் நீங்கள் குடுக்கிறதை அவை ஏற்றுக்கொள்ளுவினம். தாய் மனிசியாலைதான் அவசரப்படுகினமே தவிர அவனுக்கிப்ப கலியாணத்துக்கு அவசரமில்லை. அவனும் மாட்டன் எண்டுதான் சொன்னவன், அதுதான், உத்தியோகந்தான் தடங்கல் எண்டால் நான் கறண்டி (Guarantee) பண்ணுறன். வாறமாசமோ அடுத்த மாசமோ அது கிடைக்கும். அதைப்பற்றி நீ யோசிக்கவேண்டியதில்லை.

சிற்றம் : (யோசனையிலிருந்து மீண்டு) இல்லை... இல்லை... எனக்கு விருப்பமில்லை எண்டில்லை. செல்வீற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேக்காமல் இதுக்கொரு முற்றுச்சொல்லுறது சரியில்லை எண்டுதான் நான் யோசிக்கிறன்.

சிவக் : ஓ.... அது சரி... அவளின்ரை முடிவுதான் முக்கியம். ஆ.... (யோசித்து நீ கேட்டு வை. ஏதோ என்ரை பிள்ளைக்காகக் கதைக்கிறன் எண்டு யோசிக்காதை. உனக்கென்ன ஊர் நடப்புத் தெரியாதே. ஒரு நல்ல மாப்பிளையை எடுக்கிறதுக்கு இருக்கிற வில்லங்கங்கள் உனக்குத் தெரியுந்தானே. நீயும் இதைப்பற்றி ஒருக்கால் வடிவாய் யோசிச்சுப்பார். (எழுந்து) நான் நாளைக்கு வாறன். இது ஒரு அவசரமான விஷயம். நாள்க் கடத்தக்கூடாது. நான் வரப்போறன்... (கதவைப் பார்த்து) செல்வி... ... நான் வரப்போறன்... ... (செல்வியைக் காணவில்லை சிற்றம்பலத்தாரிடம்) சொல்லுங்கோ நான் பிறகு வாறனெண்டு.

சிற்றம் : ஓம்... ... நான் சொல்லுறன்.

(சிவக்கொழுந்து வெளியேறுகிறார்)

(சிற்றம்பலம் யோசித்தபடியே திரும்பி வந்து கதிரையில் அமருகிறார். அமர்ந்து யோசித்தபடியே இருக்கிறார். செல்வி வருகிறாள்.)

செல்வி : எங்கை மாமா போட்டாரே.

சிற்றம் : கூப்பிட்டார். உன்னைக் காணேல்லை. பிறகு வாறன் எண்டு சொல்லச் சொல்லிப் போட்டுப் போறார்.

செல்வி : ஏதோ முக்கியமான விஷயம் எண்டார். என்னவாம் அப்பா.

சிற்றம் : ம்... ... (இலேசாகச் சிரித்தபடி) உனக்கு ஒரு கலியாணம் பேசிக் கொண்டு வந்தவர். கார்த்திகேசற்றை மகன் சந்திரனைத்தான். இப்பத்தான் இவன் B.Aபாஸ்-பண்ணினவன். தெரியுந்தானே.

செல்வி : என்னப்பா நீங்கள். இப்ப சயன்ஸ் கிறட்யுவேட்சே வேலை இல்லாமல் கஸ்டப்படுகினம்... ... நீங்கள் ஒரு ஆட்ஸ் கிறட்யுவேற்றைப்பற்றிச் சொல்றீங்கள். எனக்குத் தெரியும். என்ரை கிளாஸ்மேற் ஒருத்தியின்ரை அண்ணை B.A.பாஸ்பண்ணி இப்ப பத்து வருஷம்.



சிற்றம் : ஏன் செல்வி B.A. பாஸ்பண்ணின எல்லாரும் வேலை இல்லாமலோ இருக்கினம். பாஸ்பண்ணி அடுத்த கிழமை அல்லது பாஸ்பண்ண முதலே உத்தியோகத்துக்குப் போறவை எத்தனைபேர்... ... அதுதான் சொல்லுறது... உத்தியோகம் எண்ட விஷயம் பிறக்கிற இடத்தையும் இருக்கிறஅணையையும் தான் முழுக்க முழுக்கப் பொறுத்திருக்கு எண்டு. அதுதான்... எடுத்த உடனை இந்தச் சம்மந்தத்தை விடுகிறதுக்கு எனக்கு விருப்பமில்லை... ... ... (யோசித்தபடி)... ... சிவக்கொழுந்தரும் கார்த்திகேசரும் நல்ல செல்வாக்கான ஆக்கள்... ... சந்திரனுக்கு உத்தியோகமே தேவையில்லை... ... நிலபுலன்களைப் பார்த்தாலே போதும்... ... எனக்குத் தெரியத்தக்கதாய் எத்தினை பேருக்கு... கார்த்திகேசர் உத்தியோகம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்... நல்ல செல்வாக்கான ஆள்... நல்ல மனிசன்... இனி... சிவக்கொழுந்தர்... ... அவர் இன்னும் செல்வாக்கான ஆள்... அந்த மனிசன் நினைச்சால் நாளைக்கே உத்தியோகம்... இனி அவன் பொடியனும் நல்ல குணமான பொடியன்... சோலி... சுறட்டுக்குப் ... ... ... ... ... (பேசுவதுபோன்ற பாவனை தொடர்ந்து நடக்கிறது).

மேற்சொன்ன வசனங்களைச் சிற்றம்பலம் பேச ஆரம்பித்து அரைவாசிக்கு வந்ததும் ஒளிப்பொட்டைத் தவிர மற்ற ஒளிவிளக்குகள் மங்கி மறைகின்றன. பின்னர் சிற்றம்பலம் பாவனையோடு தொடர்ந்து பேச செல்வி கதிரையில் சாய்ந்து நிமிர்ந்த நிலையில் “சிலை” ஆகிறாள். வசனங்கள் தொடர்ந்து பேசப்பட ஒளிப்பொட்டும் மங்கத் தொடங்கி பேசுவது போன்ற பாவனை மட்டும் நடக்கும்போது மேலும் மங்கி மறைகிறது.

**இருட்டிலே திரை மூடுகிறது**

**முதலாம் அங்கம் முடிவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அங்கம்

### காட்சி : 1

வலப்புற மேடையில் சற்று முன்தள்ளி ஒரு நீண்ட மேசை சரிவாக உள்ளது. மேடையின் வலக்கரையை அண்டி மேசையோடு மூன்று குற்றிகள் வைக்கப்பட்டுள்ளன. முன்மேடை வலப்புறத்தில் ஒரு தொப்பி மாட்டி இருக்கிறது. மேசை கறுப்புத் துணியால் மூடப்பட்டுள்ளது. மேசையிலே சில தாள்கள், மைக்கூடு, பேனா, கண்ணாடி நிறைகள், மேசை மணி, தொலைபன்னி போன்றன வைக்கப்பட்டுள்ளன. மூன்று குற்றிகளுக்கும் முன்னால், அதாவது நடுமேடையை அண்டி மேசையோடு ஒரு குற்றி வைக்கப்பட்டுள்ளது. மேடையின் இடப்புற அரையின் அந்தலையில் இரண்டொரு கதிரைகள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. நடுமேடை பின்புறத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தை நிலைபோலப் பாவித்து, மேடை வலப்புற அறைக்குப் போய் வருவதற்கு அந்த இடத்தையே பாவிக்கவேண்டும். கதவு நிலையைக் குறிக்கச் சட்டப்படல் தேவையில்லை. நடிகர்கள் கவனமாக இந்த இடத்திற்கூடாகவே போய் வந்தால் கதவு இருக்கின்ற உணர்வைச் சபையோர் மத்தியிலே ஏற்படுத்திவிடலாம்.

### திரை விலகுகிறது

காட்சி ஆரம்பமாகும்போது பத்துப்பன்னிரண்டு நேர்முகப் பரீட்சார்த்திகள், வெள்ளைலோங்ஸ், வெள்ளைசேட், மட்டைகள் சகிதம் இடப்புற மேடை பிற்பகுதியில் கூட்டமாக நிற்கிறார்கள். தொப்பி மாட்டியை பியோன் ஒருவர் காவிவந்து வலப்புற மேடை முன்பக்கத்தில் வைக்கிறார். வைத்தபின் மேசையையும் குற்றிகளையும் ஓங்கி ஓங்கி அடித்துச் சுத்தம் செய்கிறார். இவை அனைத்தையும் பரீட்சார்த்திகள் கவனிக்கவில்லை. ஏனெனில் கற்பனையான ஒரு சுவர் இக்காட்சியை அவர்களிடமிருந்து மறைத்துவிடுகிறது. பின்னர் விவரிக்கப்படும் நேர்முகக் காட்சியின்போதும் பரீட்சார்த்திகள் உள்ளே நடக்கும் பரீட்சையை நேராகப் பார்ப்பதுபோல் பாவனை செய்யக்கூடாது. சிலர் கதைத்துக்கொண்டும், வேறு ஓரிருவர் அந்தரத்தோடு, இருக்க முடியாதபடி தவித்துக் கொண்டும் இருப்பதுபோல் கதிரைகளில் இருந்து பாவனை செய்யவேண்டும். நடிகர்கள் செய்யவேண்டிய மற்றப் பாவனைகள் அவ்வப்போது கூறப்படும்.



பியோனைத் தவிர்ந்த ஏனைய நடிகர்களின் நடிப்பு "பேசாப் பாவனையிலே" (panto mime) அமையும்.

மேற்கூறியபடி ஓங்கி அடித்துத் துடைத்த பியோன் நிலையைக் குறிக்கும் இடத்தால் வெளியே அதாவது இடப்புற மேடைக்கு வருகிறார். பரீட்சார்த்திகளை எட்டி, ஆடிப் பார்த்தபின் சேமக்கலம் போன்ற ஒன்றை ஒரு கதிரையிலிருந்து எடுத்து மடமடவென்று அதைஅடிக்கிறார். பரீட்சார்த்திகள் எல்லோரும் இடப்புற மேடைக்கு வருகின்றனர். வந்ததும்,

பியோன் : எக்சாம் (Exam) லைன் அப் (line up) *(பரீட்சார்த்திகள் எல்லோரும் மடமடவென வரிசையில் நிற்கிறார்கள். முன்மேடையிலிருந்து பின்மேடைவரை எல்லாப் பரீட்சார்த்திகளையும் மிக வேகமாக ஆனால் காத்திரமாகப் பார்த்தபடியே பியோன் போகிறார். பின் மேடைக்குச் சென்றதும் மண்டபத்தைப் பார்த்தபடி நேராய் நின்று.*

பியோன் : எக்சாம்... ... ஆம்ஸ்லெந்த் (Exam Arms length) *(பரீட்சார்த்திகள் வலக்கையை நீட்டி இடை எடுக்கின்றனர்)*

பியோன் : எக்சாம். றைற் ரேண் (Exam Right turn)

*(எல்லோரும் வலப்புறமாகத் திரும்புகின்றனர். பியோன் நேராய் நின்றபடியே)*

பியோன் : எக்சாம் தற் சைட் ரேண் (Exam that side turn)

எல்லாப் பரீட்சார்த்திகளும் வெவ்வேறு திசையில் திரும்புகின்றனர். பாவனை மூலம் எல்லோரையும் ஏசியபடி பியோன் முன்மேடைக்கு வருகிறார். சபையோருக்குப் பின்புறத்தைக் காட்டியபடியே நேராய் நின்று)

பியோன் : எக்சாம்... ... திஸ் சைட் ரேண் (Exam This side turn) *(எல்லாப் பரீட்சார்த்திகளும் சபையோரைப் பார்த்தபடி திரும்புகின்றனர்)*

பியோன் : எக்சாம்... றைற் ரேண் (Exam Right turn) *(பரீட்சார்த்திகள் வலப்பக்கம் திரும்புகின்றனர். அவர்களை எல்லாம் வடிவாய்ப் பார்த்து சிலருக்கு ரை முதலியவற்றைச் சரிசெய்கிறார். பின்,)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியோன் : எக்சாம்... ... சிற் (Sit)

பரீட்சார்த்திகளுள் சிலர் கதிரைகளில் அமருகின்றனர். மற்றவர்கள் கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர்.

சேமக்கலத்தோடு பியோன் உள்ளே, அதாவது பரீட்ை நடக்கும் அறைக்குள் போகிறார். ஜன்னல் சட்டப்படலு முன்னால் நின்றபடி சேமக்கலத்தை மடமடவென்று அடிக்க எல்லாப் பரீட்சார்த்திகளும் எழுந்து அறைக்குள் போக எத்தன கின்றனர். பியோன் ஓடி வந்து எல்லோரையும் தடுத்துப் பிடி மீண்டும் கதிரையில் போய் இருக்கும்படி வெருட்டுகிறார். அவர் எல்லோரும் போய் இருந்ததும் மீண்டும் தான் அதை அடித்தால் வரக்கூடாதெனச் சைகைமூலம் விளக்குகிறார். பின்னர் பழைய இடத்திலேயே போய் நின்று கதவு நிலைக்குள்ளால் எட்டிப் பார்த்து வரக்கூடாதெனச் சைகை செய்தபின் மீண்டும் சேமக்கலத்தை மடமடவென அடிக்கிறார். அவர் அடித்து ஓய்ந்ததும் மூன்று நீதியரசர்கள் நீளமான கரிய மேற்கோட்டைப் போட்டபடி ஒவ்வொருவரும் கையிலே தராசொன்றைப் பிடித்தபடி ஒருவர் பின் ஒருவராகத் தாண்டித் தாண்டி முன்மேடைக்கு வருகிறார்கள். தராசுகள் ஒருபக்கம் சாய்ந்தே இருக்கின்றன. முன் மேடைக்கு வந்தவர்கள் தராசுகளைத் தொப்பிமாட்டியில் தூக்கிய பின்னர் இடக்கைகளைத் தூக்கி நடுவே ஒன்றையொன்று தொடும்படி பிடித்து மடமடவென்று வாய்க்குள் ஏதோ முணுமுணுக்கிறார்கள். பின்னர் தாண்டித்தாண்டி மேசையை ஒருமுறை சுற்றி வருகிறார்கள். சுற்றி வந்தவர்கள் குற்றிகளில் அமருகிறார்கள்.

நடுவிலிருப்பவர் பரீட்சைக் குழுத் தலைவர். அவருக்கு வலப்புறம் சபையோரை அண்டி இருப்பவர் உதவித்தலைவர், இடப்புறம் இருப்பவர் தலைவர் - 3.

ஒரு கடுதாசியை எடுத்து நாலு மூலைகளையும் மாற்றிமாற்றித் தலைவர் பார்க்கிறார். பின்னர் உதவித் தலைவரைப் பார்த்து தலைஆட்டுகிறார். உதவித் தலைவர் மேசை மணியை ஒருமுறை அடிக்கிறார். பியோன் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டை எடுத்து வெளியே வந்து,

பியோன் : (மிகக்கெதியாக) ரத்னசாவுதி... ரத்னசாவுதி... (உள்ளே போகிறார்)

பரீட்சார்த்திகள் விழிக்கின்றனர். யாரைக்கூப்பிட்டார்கள் என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். அவர்களில் ஒருவர் மற்ற ஒருவரைக்



காட்ட அவர் அந்தரத்துடன் உள்ளே போகிறார். போனதும் தலைவர் அவரை அமரச் சொல்லிச் சைகை காட்டுகிறார். பரீட்சார்த்தி கொண்டு வந்த நற்சாட்சிப் பத்திரங்களை தலைவர் - 3 வாங்கி பத்திரங்களைக் கீழே வைத்துவிட்டு மட்டையை வடிவாய்ப் பார்க்கிறார். பார்த்தபின் சரியில்லை எனத் தலையை ஆட்டுகிறார். தலைவர் இருந்தபடியே பரீட்சார்த்திக்குக் கிட்ட எட்டி,

தலைவர் : லங்குறு சிம்பிலி சாலா

(உரக்கக் கேட்கிறார்)

பரீட்சா 1 : (விழிக்கிறார்)

தலைவர் : (மீண்டும்) லங்குறு சிம்பிலி சாலா.

பரீட்சா 1 : (விழிக்கிறார்)

(தலைவர் உதவித் தலைவரைப் பார்க்கிறார். அவர் தலையாட்டியபடி மேசை மணியைத் தூக்கி அடிக்கிறார். பரீட்சார்த்தி 1 தொங்கிய தலையோடு வெளியேறுகிறார்.)

உதவித் தலைவர் சேமக்கலத்தை மீண்டும் அடிக்கிறார்.

பியோன் : (வெளியே போய்) யோக.... யோக... ....

(பரீட்சார்த்தி 2 எழுந்து உள்ளே வருகிறார். வந்து ஆசனத்தில் அமருகிறார். தலைவர் 3 பத்திரங்களை வாங்கி அதை மணந்து பார்த்து நல்ல மணம் எனத் தலை ஆட்டுகிறார். உதவித்தலைவர் எழுந்து ஒரு காகிதத்தைப் பரீட்சார்த்தியிடம் கொடுத்து அதில் எழுதும்படி கூறுகிறார். பரீட்சார்த்தி எழுதியதை மணந்து பார்க்கிறார். மூக்கைச் சுழித்தபடியே ஆசனத்தில் அமருகிறார்.)

தலைவர் : (பரீட்சார்த்தி 2 இற்குக் கிட்ட எட்டி) லங்குறு சிம்பிலி சாலா.

பரீட்சா 2 : (விழிக்கிறார்)

சிறிது நேரத்தின் பின் மேசைமணி அடிபடுகிறது. தொங்கிய தலையோடு பரீட்சார்த்தி 2 வெளியே போகிறார்.

(உதவித்தலைவர் மீண்டும் மேசை மணியை அடிக்கிறார்)

பியோன் : கந்த... ... கந்த ... ...

(பரீட்சார்த்தி 3 உள்ளே வந்து அமருகிறார். உதவித் தலைவர் எழுந்து அவர் தலைமயிரைப் பிடித்துப் பார்க்கிறார். அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை மணந்து பார்க்கிறார். அதைத் தட்டிப் பார்க்கிறார். மூக்கைச் சுழித்தபடியே போய் இருக்கிறார். தலைவர் பரீட்சார்த்தியை எழுந்து போகும்படி சைகை காட்டுகிறார். அவரும் போகிறார். மேசை மணி அடிக்கப்படுகிறது)

பியோன் : சதாசி... ... சதாசி ... ...

(பரீட்சார்த்தி 4 எழுந்து உள்ளே வந்து இருக்கிறார்)

தலைவர் : (கிட்ட எட்டி) லங்குறு சிம்பிலி சாலா.

பரீட்சா4 : (விழிக்கிறார்)

(உதவித்தலைவர் எழுந்துபோய் கோட்டை மணந்து பார்க்கிறார். பரீட்சார்த்திக்குப் பின்னால் உதவித் தலைவர் நிற்கும்போது பரீட்சார்த்தியை எழும்பும்படி தலைவர் பணிக்கிறார். பரீட்சார்த்தி எழுகிறார். அவர் இருந்த கதிரை உதவித்தலைவரால் பின்னால் இழுக்கப்படுகிறது. தலைவர் பரீட்சார்த்தியை இருக்கும்படி சைகை செய்கிறார். அவர் கீழே விழுந்து புரள்கிறார். மூவரும் கைதட்டிச் சிரித்து ஆரவாரிக்கிறார்கள். பரீட்சார்த்தி எழுந்து பத்திரங்களை வாங்கிக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளியே போகிறார்.)

(உதவித்தலைவர் இருந்தபடியே பியோனுக்கு சைகை காட்டுகிறார்.)

பியோன் : (வெளியே வந்து) முத்துலி... ... முத்துலி... ...

(பரீட்சார்த்தி 5 உள்ளே வந்து இருக்கிறார். பத்திரங்கள் மணந்து பார்க்கப்படுகின்றன.)

தலைவர் : (கிட்ட எட்டி) லங்குறு சிம்பிலி சாலா.

பரீட்சா5 : விழித்தபடி அங்கும் இங்கும் பார்க்கிறார்.

இப்போது ரெலிபோன் அடிக்கிறது. உதவித் தலைவர் எடுக்கிறார். காதருகே வைத்ததும் தலைவரிடம் கொடுக்கிறார். அவர்... ... ஆ... ... என்றபடி திடுப்பென்று எழுகிறார். மற்ற இருவரும் எழுகிறார்கள்.

தலைவர் : (மிகவும் பணிவாக ஆனால் அந்தரத்துடன்)

யெஸ் சேர்... ... ... யெஸ் சேர்.



ரெலிபோனை வைக்கிறார். தலைவர் காகிதத்தோடு முன் மேடை வலப்புறத்துக்கு வருகிறார். மற்ற இருவரும் பின்தொடருகிறார்கள். மூவரும் குனிந்து காகிதத்தைப் பார்த்துப் பார்த்து மாறிமாறி சம்பாசிக்கிறார்கள். கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வருகிறார்கள். கைதொடுத்துச் சபதம் செய்த பின்னர் மூவரும் தாண்டித் தாண்டி மேசையடிக்கு வந்து, தலைவரும் மூன்றாமவரும் போய் இருக்க உதவித் தலைவர் பரீட்-5 இற்குக் கிட்டே வருகிறார். வந்ததும் தலைவர் பரீட் -5 ஐ எழும்பும்படி சைகை செய்கிறார். அவர் எழுந்ததும் கதிரை பின்னால் இழுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் ரெலிபோன் மீண்டும் அடிக்கிறது. தலைவர் ரெலிபானை எடுக்கிறார். எடுத்து காதருகே கொண்டுபோய் பின் உதவித் தலைவரிடம் கொடுக்கிறார். அவர் அதை வாங்கி "ஓம்" என்னும் பாவனையில் தலையை ஆட்டி ஆட்டிக் கதைக்கிறார். கதைத்து, முடிந்ததும் மற்ற இருவரையும் வரும்படி சைகை செய்து தாண்டித் தாண்டி வந்ததும் மூவருக்குமிடையில் குனிந்தபடி சம்பாசனை நடக்கிறது. தலைவர் முடியாது என்று சொல்வது போலும், உதவித் தலைவர் "கட்டாயம் வேணும்" என்று அடித்துக் கூறுவது போலவும் பாவனை நடக்கிறது. இவர்களுள் ஒரு சமரசம் வராதுவிடவே "விடுவிடு" வென மேசையடிக்கு வருகிறார்கள். உதவித் தலைவரின் முகத்தில் கோபச் சாயல் தெரிகிறது. தலைவர் பரீட்-5ஐ வெளியே போகும்படி வெருட்டுகிறார். அவர் பயந்து வெளியே ஓடுகிறார்.

இப்போது தலைவருக்கும் உதவித் தலைவருக்கும் கைமடக்கும் போட்டி நடைபெறுகிறது. மூன்றாமவர் நடுவராய் பணிபுரிகிறார். இருவரும் மேசையில் முழங்கைகளை ஊன்றி ஒருவர் கையை மற்றவர் மடக்குவதற்கு மும்முரமாக முனைகின்றனர். மூன்றாமவர் போட்டியின் கடுவலை பாவனைமூலம் வெளிப்படுத்துகிறார். கடைசியில் வெற்றி தலைவருக்கே கிட்டுகிறது. தலைவர் மற்ற இருவருக்கும் கைகொடுக்கிறார். அதன்பின் மூவரும் கைகொடுத்து சபதம் செய்து ஆசனத்தில் அமருகிறார்கள். பியோனைத் தலைவர் அழைத்துக் காகிதத்தைக் காட்டி ஏதோ கூறுகிறார். பியோன் வெளியே போய் ஆடைகளைச் சரிசெய்து மிகக் கம்பீரமாய் ஆறுதலாக,

பியோன் : மாணிக்கவாசகர்... ... மாணிக்கவாசகர்... ...

மாணிக்கவாசகர் என்பவர் எழுந்து உள்ளே வருகிறார். அவர் வரும்வரை பியோன் வாசலிலே நின்று அவர் உள்ளே போனதும் தனது ஆசனத்தில் அமருகிறான். மாணிக்கவாசகர் உள்ளே வந்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் எழுந்து ஆரவாரத்தோடு அவனை வரவேற்றனர். ஆரவாரத்துக்கேற்றபடியே மாணிக்கவாசகரும் உயர்தர சூட்டும், பணக்கார குடும்பத்து ஆள் போலவும் தோற்றமளிக்கிறான். மற்ற இருவரும் தலைவருக்குக் கைகொடுக்கிறார்கள். மாணிக்கவாசகர் இருந்ததும் மற்ற மூவரும் இருக்கிறார்கள்.

மூன்றாமவர் பத்திரங்களை எடுத்து மணந்து "ஆ" என்றபடி மீண்டும் மீண்டும் மணக்கிறார்.

உதவித் தலைவர் எழுந்து ஒரு காகிதத்தை மாணிக்கவாசகரிடம் கொடுத்து எழுதும்படி சைகை செய்கிறார். அவர் திருதிருவென்று விழித்தபடி இருக்க தலைவர் காகிதத்தை எடுத்து மணந்துபார்த்து "ஆ" என்று ஆச்சரியப்படுகிறார். மூன்றாமவர் காகிதத்தைப் பறித்துத் தானும் மணந்து "ஆ" என்கிறார். தலைவர் மாணிக்கவாசகருக்குக் கிட்ட எட்டி,

தலைவர் : (இராகத்தோடு ஆதரவாய் ஆறுதலாய்) லங்குறு சிம்பிலி சாலா.

மாணிக்கவாசகர் விழித்தபடி இருக்கவே மூவரும் காதில் கையை வைத்தபடி அவர் கூறாதவற்றைக் கேட்க எத்தனிக்கிறார்கள். மாணிக்கவாசகர் பேசாமல் விழித்தபடியே இருக்கிறார். மூவரும் "ஆ" என்ற ஆச்சரியத்தோடு பின்வாங்குகின்றனர். மற்ற இருவருக்கும் தலைவர் கை கொடுக்கிறார்.

பின்னர் தலைவர் மாணிக்கவாசகரை எழும்பும்படி சைகை செய்கிறார். அவர் எழுகின்றார். உதவித் தலைவர் கதிரையைப் பின்னால் இழுக்கிறார். இதன் பின்னர் தலைவர் கதிரையைப் பார்க்கும்படி மாணிக்கவாசகருக்கு சைகை செய்கிறார். அவர் பார்க்கிறார். பின் இருக்கும்படி சைகை செய்கிறார். அவர் கதிரையை இழுத்துப் போட்டபடி அமர்கிறார். மூவரும் கைதட்டி ஆரவாரிக்கின்றனர். தலைவர் மற்ற இருவருக்கும் கைகொடுக்கிறார். பின் மூவரும் மாணிக்கவாசகருக்கு மாறிமாறிக் கைகொடுக்கின்றனர். அவர் வீறு நடையோடு வெளியே வந்து மேடைக்கு அப்பால் போய்விடுகிறார்.

உதவித் தலைவர் பியோனைக் கூப்பிட்டு ஏதோ சொல்கிறார். தலைவர் அவனிடம் அதை ஆமோதிக்காது கையை அங்கும் இங்கும் ஆட்டுகிறார். உதவித் தலைவர் அவனிடம் ஏதோ சொல்லி அனுப்புகிறார். அவன் வெளியே வந்து ஓரளவு கம்பீரத்தோடு,



பியோன் : சந்திரன்... ... ... சந்திரன்... ... ...

சந்திரன் உள்ளே போனதும் அவன் ஆசனத்தில் அமர்கிறான். சந்திரன் உள்ளே வந்ததும் தலைவரைத் தவிர மற்ற இருவரும் எழுந்து வரவேற்கின்றனர். முந்திய ஆரவாரம் இல்லை. தலைவர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறார். சந்திரன் இருந்ததும் பத்திரங்கள் மணக்கப்படுகின்றன. மூன்றாமவர் ஆமோதிக்கிறார். தலைவர் மறுக்கிறார். கோட்டு மணக்கப்பட்டு ஆமோதிக்கப்படுகிறது. தலைவர் மறுக்கிறார். கடுதாசியில் எழுதி மணக்கப்படுகிறது. தலைவர் மறுக்கிறார். தலைவர் கிட்ட எட்டி,

தலைவர் : லங்குறு சிம்பிலி சாலா.

சந்திரன் விளங்காது அங்கும் இங்கும் பார்க்கிறான். உதவித் தலைவர் மட்டும் கேட்கும் பாவனையில் கிட்டப்போய் "ஆ" என்கிறார். தலைவர் மறுக்கிறார். கடைசியாக தலைவர் அவனை எழும்பும்படி சைகை செய்கிறார். அவன் எழுந்ததும் உதவித் தலைவர் கதிரையைப் பின்னால் இழுக்கிறார். இருக்கும்படி தலைவர் சைகை காட்டும்போது உதவித்தலைவர் கைதட்டி ஆரவாரிக்கிறார். தலைவர் மறுக்கிறார். சந்திரனை எழுந்து போகும்படி தலைவர் சைகை செய்கிறார். தொங்கிய தலையோடு அவன் வெளியே போய் மற்றவர்களோடு சேர்கிறான்.

மூன்று தலைவர்களும் பின் எழுந்து மேசையை ஒருமுறை சுற்றி வருகிறார்கள். தொப்பி மாட்டியை நெருங்கி அதில் மாட்டிய தராசுகளைத் தூக்கிப் பிடித்தபடி தாண்டித்தாண்டி உள்ளே போகிறார்கள். இவர்கள் போனதின்பின் பியோன் குற்றிகளையும் நீளமேசையில் உள்ள பொருட்களையும் அப்புறப்படுத்துகிறான். அதன்பின் தான் தன்னுடைய குற்றியையும் உள்ளே கொண்டு-போகிறான்.

மாணிக்கவாசகர் தவிர்ந்த ஏனைய பரீட்சார்த்திகள் தமது பரீட்சை முடிவடைந்ததும் மேடையை விட்டு வெளியே போகாது பின் மேடை இடப்புறத்தை அணுகிச் "சிலை" ஆகிறார்கள். சந்திரன் வரை இத்தொகை கூடுகிறது. மூன்று நீதியரசர்களும் போனதின்பின் எஞ்சிய பரீட்சார்த்திகளும் இவர்களோடு சேர்கிறார்கள். பியோன் போன பின்னர் குறைந்தது பத்துப்பேராவது "சிலை"யாக நிற்பது அவசியம்.

பரீட்சை மேசையைச் சுற்றி ஒளிப்பொட்டு பாய்ச்சப்படுகிறது. மற்ற ஒளிவிளக்குகள் மங்கலாக்கப்படுகின்றன. இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலைத்தன்மை கலைக்கப்பட்டு பரீட்சார்த்திகள் வரிசையாக மேசையை நோக்கி வருகிறார்கள். வந்து மேசையைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். சுற்றிச்சுற்றி வரும்போதே அவர்கள் தங்களது மட்டைகளை ஒருபுறம் வைத்துவிடுகிறார்கள். இப்போது லோங்ஸ், சேட்டோடு அவையும் கலைபட்ட நிலையில் - மேசையைச் சுற்றி வருகிறார்கள். பின்னர் மெல்ல மெல்ல நடை ஓய்ந்து நின்ற நிலையிலே நடப்பதுபோன்று பாவனை செய்கிறார்கள். நடையிலே சோர்வும் பல நேர்முகப் பரீட்சைகளுக்குப் போய்வந்த களைப்பு விரக்தி ஆகியனவும் தெரியவேண்டும். இந்நிலையில் இரண்டாம் காட்சி இதோடு கலக்கப்படுகிறது.

## காட்சி : 2

முதலாம் காட்சி முடிவில் பரீட்சார்த்திகள் மேடையைச் சுற்றி நடப்பது போன்ற பாவனையின்போது மேசையைச் சுற்றியிருந்த ஒளிப்பொட்டு மங்கப்பட்டு மற்ற ஒளிவிளக்குகளோடு சமத்தன்மை அடைகிறது. மேடைமீது இப்போது மங்கிய ஒளியே பாய்ச்சப்படுகிறது. இந்த மங்கலின்போது சிவக்கொழுந்து, கார்த்திகேசு, செல்வி ஆகிய மூவரும் முன்மேடை இடப்புறத்துக்கு வந்து அங்கு ஒரு வளைவாகப் போட்டுள்ள நாற்காலிகளில் சபையோரைப் பார்த்தபடி இருக்கிறார்கள். செல்வி மூடிய ஒரு புத்தகத்துள்ளே ஒரு விரலை இடுக்கி அதை மடிமீது வைத்துப் பிடித்தபடி நாற்காலியிலே சாய்ந்து பார்வையைக் கோணச் சாய்வாய் மேலே படியவிட்டபடி இருக்கிறாள். அவள் முகத்திலே கவலைக்குறியும் ஏக்கமும் தெரிகின்றன. அவளுக்குப் பக்கத்துக் கதிரையில் கார்த்திகேசு இருக்கிறார். அமைதியில்லாத நிலையில் சால்வையால் நெற்றியை ஒற்றுவதும் மேலே பார்ப்பதும் கையைப் பார்ப்பதுமாய் இருக்கிறார். இவருக்குப் பக்கத்தில் மேடை இடப்புறக் கரையை அண்டி - சிவக்கொழுந்து இருக்கிறார். சட்டைப்பையிலே இருந்து ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைக்கிறார். இந்த வெளிச்சத்தின்போது ஒரு ஒளிப்பொட்டு இவர்கள் மீது பாய்ச்சப்படுகிறது. இழுத்த புகையை மேலே ஊதி, தொண்டையைச் செருமியபடி சிவக்கொழுந்தர் பேச்சை ஆரம்பிக்கிறார்.

சிவக் : என்ன செல்வி... ... கொஞ்சம் கூடுதலாய்க் கவலைப்படுகிறாய் போல கிடக்கு... ...



செல்வி : (விரக்தியாக) கவலைப்படாமல் சந்தோஷப்படுகிறதுக்கு என்ன மாமா இருக்குது.

சிவக் : ஏன் மோனை அப்பிடிச் சொல்லுறாய். ஒருகுறையுமில்லாமல்தானே மாமா (கார்த்திகேசுவைக் காட்டி) உன்னைப் பார்க்கிறார். அப்பிடித்தான் ஏதாவது நடந்தாலும் நீ மாமாட்டைச் சொல்லலாந்தானே.

செல்வி : நீங்கள் நினைக்கிறியளோ மாமா ஆகச் சோறும் சீலையும் தான் மனிசருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிற சாமான்களெண்டு.

கார்த்தி : அதுக்கென்ன செல்வி செய்யிறது. அவனும்இப்ப எத்தினை இன்ரவியூவுக்குப் (Interview) போட்டு வந்திட்டான்.

செல்வி : (கார்த்திகேசுவை நேரே பார்க்காது) போட்டு வந்தால் மட்டும் போதுமே.

சிவக் : அது செல்வி சொல்றதும் ஒருவகைக்குச் சரி. அவன் சந்திரன்ரை விஷயத்திலை இனிக் கொஞ்சம் கூடின கவனம் எடுக்கவேணும். இப்பிடியே விட்டுவிட்டு வருசம் மூண்டாய்ப் போய்ச்சுது. எங்கையெண்டாலும் ஒரு இடத்திலை அவனைக் கெதியாய் மாட்டவேணும்.

கார்த்தி : நானும் கேக்காத ஆக்களில்லை. எனக்குத் தெரிஞ்ச எல்லாரிட்டையும் சொல்லி வைச்சிருக்கிறன். ஒவ்வொரு இன்ரவியூக்கும் போக முந்தி வேக் அப் (Work up) பண்ணிப்போட்டுத்தான் அனுப்பிறனான். ஆனால் ஒண்டும் சரிவருகுதில்லை. என்ன காலமோ.

சிவக் : காலத்தை ஏன் குறை சொல்லுவான். அது நல்லபடிக்கு வரும்... ம்... ... இண்டையான் இன்ரவியூ என்னமாதிரி?

கார்த்தி : (சற்று உறுதியாக) இந்த முறை கட்டாயம் சரிவரும் எண்டுதான் நான் நினைக்கிறன். போட்டிலை இருக்கிற ஒரு ஆளை எனக்கு நல்லாய்த் தெரியும். அவருக்கு போன்பண்ணிச் சொன்னனான். இன்ரவியூ முடிஞ்ச உடனை எனக்குப் போன்பண்ணிச் சொல்லுறன் எண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக் : காசு ஏதேனும் குடுக்கவேணுமோ.

கார்த்தி : இல்லை. அவருக்கு நான் முந்தி கன உதவிகள் செய்திருக்கிறேன். அவர் கட்டாயம் எனக்கு இந்த உதவியைச் செய்வார் (நிமிர்ந்து உட்கார்ந்து மேலே பார்த்தபடி) இந்த முறை அவர் போட்டிலை இருக்கிறார்... ... கட்டாயம் அவனுக்குக் கிடைக்கும் ... ... இப்ப சந்திரன் இன்ரவியூக்குப் போவான்... ... அவனைக் கண்ட உடனை அவருக்குத் தெரியும்... .... அவனை இருத்திப்போட்டு... ...

(இந்த வசனத்தைக் கார்த்திகேசு பேசிச் "சிலை" ஆகிறார். அவர் பார்க்கும் இடத்தை சிவக்கொழுந்தர் நிமிர்ந்து பார்த்து அவரும் "சிலை" ஆகிறார். செல்வி தான் இருக்கும் திசையிலே தலையை நிமிர்த்தி ஒருவித ஏக்கத்தோடு "சிலை" ஆகிறாள். ஆனதும் அவர்களைச் சுற்றிய ஒளிப்பொட்டு இலேசாக மங்க இதுவரை மேசையைச் சுற்றி நடப்பதுபோலப் பாவனை செய்து கொண்டிருந்த பரீட்சார்த்திகள்மீது ஒளிப்பொட்டு பாய்ச்சப்படுகிறது. நடப்பது ஓய்கிறது. சந்திரன் இடப்புற மூலையை நோக்கியபடி போய் நிற்கிறான். இருவர் சந்திரனுக்குப் பின்னால் நிற்கிறார்கள். மற்ற ஆறு பரீட்சார்த்திகளும் மேசையின் இருபக்கத்திலும் மூன்று மூன்று பேராய் நிற்கின்றனர். மற்றையோர் பின்னால் நிற்கின்றனர். வாத்தியக்குழுவின் மரண இசை (Funeral march) ஆரம்பமாகிறது. ஆறு பரீட்சார்த்திகளும் மேசையைத் தூக்கி தோழிலே சுமந்து இசைக்கு ஏற்றபடி மெல்ல மெல்ல மூலைவாட்டாக நடந்து மேடையை விட்டு வெளியேறுகிறார்கள். இவர்கள் போனதும் ஒளி கூட்டப்பட்டு "சிலை"த்தன்மை கலைக்கப்படுகிறது.

சிவக் : (செல்வியைப்பார்த்து) செல்வி... ... நீ ஒண்டுக்கும் யோசியாதை; அதெல்லாம் சரிவந்திடும்.

செல்வி : சரிவரும் சரிவரும் எண்டுதான் மாமா இப்ப வருசம் மூண்டாச்சு.
(கார்த்திகேசு பழையபடி சோகநிலைக்கு மாறுகிறார்.)

சிவக் : மூண்டு வருசம் என்ன கனகாலமோ? தங்கம் செத்த கவலையிலை மாமா எல்லாத்தையும் மறந்து போனார்... ... மூண்டு வருசம் போனது எனக்கே பெரிய ஆச்சரியமாய் இருக்குது. சரி... ... இப்ப என்ன? மாமாவும் ரிட்டையர் பண்ணிப் போட்டார். நாலுபேரிட்டைப் போய்க் கதைக்க வேண்டியளவு நேரம் இருக்கும். நானும் என்ன சும்மாவோ இருக்கப்போறன். இதே வேலைபாய்ப்பாப்பம்.



செல்வி : நீங்கள் கதைக்கிற மாதிரியைப் பார்த்தால் மாமா, ஏதோ, எனக்காகத்தான் அவர் வேலைக்குப் போகவேணும் எண்ட மாதிரி எல்லோ இருக்குது. அப்பாவோடை போய் இருந்தன் எண்டால் நான் விரும்பினமாதிரியெல்லாம் அவர் செய்து தருவார். நெடுக மாமாவையே நம்பி நாங்கள் சீவிக்கிறது நல்லதே. அவர் மகன், அவருக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. அதுகின்ரை தீமையும் அவருக்குத் தெரிவதில்லை... ... ஆனால் நான்... ...

கார்த்தி : நீ வேறை அவன் வேறை எண்டு ஏன் செல்வி பிரிச்சுக் கதைக்கிறாய். இரண்டு பேரும் எனக்குப் பிள்ளைகள் தானே.

செல்வி : அது சும்மா ஒப்பாசாரத்துக்குச் சொல்கிறது மாமா (ஆறுதலாக) உங்களுக்கென்ன மாமா. வாழ்க்கேலை நடக்க வேண்டிய முக்கியமான சம்பவங்கள் எல்லாம் உங்கிடை வாழ்க்கேலை நடந்து முடிஞ்சுது. உங்கிடை விருப்பமெல்லாம் நிறைவேறி வாழ்க்கையை முடிக்கிற கட்டத்துக்கு நீங்கள் வந்திட்டியள். ஆனால் இப்பத்தான் வாழ்க்கை எனக்குத் துவங்குது. உங்கிடை உதவி இல்லாமலே ஒரு குடும்பத்தை நான் கொண்டு நடத்த வேணும்.

சிவக் : உனக்கென்ன செல்வி. நாளைக்கு உனக்கு நாலைஞ்சு பிள்ளைகள் பிறந்தாக் கூட அதுகளை நல்ல முறையிலை வளக்கிறதுக்குத் தேவையான பொருள்பண்டம் எல்லாம் நிறைய இருக்குதே.

செல்வி : பொருள் பண்டம் இருக்குது மாமா. பாவியாமல் இருக்கும் வரைக்கும் அதெல்லாம் அப்பிடியே இருக்கும். பாவிக்கத் துவங்கினால் அது குறையும், குறைஞ்சால், அது முடியுந்தானே. முடிஞ்சாப் பிறகு என்ன செய்யிறது. அதுதான் அது முடியாமல் பாக்கிற பொறுப்பு குடும்பத் தலைவனுக்கு இருக்கவேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக் : செல்வி, நீ எங்களைப் பார், பொறுப்புணர்ச்சி இல்லாமலோ நாங்கள் இவ்வளவு சொத்துப் பற்றுக்கும் முதலாளிகளாய் வந்தனாங்கள். அவனுக்கும் எங்கிடை இரத்தம் தானே ஓடுது. நீ ஒண்டுக்கும் யோசியாதை.

(இந்த நேரத்தில் சந்திரன் இன்ரவியூவால் வருகிறான். களைத்து நம்பிக்கை இழந்த முகத்தோடு உள்ளே வர செல்வி நாற்காலி-யிலிருந்து எழுந்து கார்த்திக்கேசுவிற்குப் பக்கத்தில் போய் நிற்கிறாள், உள்ளே வந்த சந்திரன் நாற்காலியில் இருந்தபடி கையில் இருந்த மட்டை, பத்திரங்களைக் கீழே போடுகிறான். நாற்காலியில் சாய்ந்து கால்களை நீட்டி நிமிர்ந்தபடி கை இரண்டையும் மடக்கி தலைக்கு அணைகொடுத்தபடி மௌனமாக மேலே பார்க்கிறான். இந்நிலை-யில்)

சிவக் : ஏன்ரா சந்திரன் எப்படி இன்றவியூ?

சந்திரன் : (மேலே பார்த்தபடி) நடந்துது.

கார்த்தி : ஏன் நீ நல்லாச் செய்யேல்லையே.

சந்திரன் : செய்யிறதுக்கு ஏதாவது நடந்தால்தானே, போட்டிலை இருக்கிறவர் தனக்குத் தெரிஞ்சதைத்தான் கேப்பார். அது எனக்கும் தெரியவல்லோ வேணும்.

செல்வி : அது இஞ்சை இருந்து போகேக்கையே உத்தியோகம் வேண்டாம் எண்டு கொண்டுதான் மாமா போறது.

சந்திரன் : (நிமிர்ந்து) நீ சும்மா இரு செல்வி. ஏதோ நூறு இன்ரவியூக்குப் போட்டு வந்தவள் மாதிரி.

கார்த்தி : (சற்றுக் கோபமாக) அப்ப நீயும் ஏதாவது கரிசனை எடுத்தாலெல்லோ.

சந்திரன் : நான் கரிசினைப் பட்டு என்ன செய்யிறது. செய்யிறதுக்கு வேலையுமெல்லோ இருக்கவேணும்.

சிவக் : உத்தியோகம் இல்லாமலோ அவங்கள் உன்னை இன்ரவியூவுக்குக் கூப்பிட்டவங்கள்.

சந்திரன் : ஓ... ... அது சனங்களை ஏமாத்திறதுக்கு நடக்கிற சின்ன நாடகம். இன்ரவியூவிலை எடுபடாட்டில் கேக்கிறவை-யும் மற்றவையும் யோசிக்கிறது அந்த உத்தியோகத்-துக்குத் தாங்கள் தகுதி இல்லையாக்கும் எண்டு. ஆனால் உண்மையிலை அதுகின்ரை நோக்கம் வேறை.



சிவக் : நோக்கம் வேறையோ?

சந்திரன் : (ஆழமான சிந்தனையோடு) பெரியையா... ... நான் இதுவரைக்கும் போட்டு வந்த இன்ரவியூக்களிலை பழைய முகங்களை மாத்திரமில்லை, அதோடை எத்தினையோ புதுப்புது முகங்களையும் சந்திக்கிறன். ஏன் இவளவு பேருக்கும் வேலை இல்லை... ...? ஏன் இந்தத் தொகை வரவரக்கூடுதெண்டு...

சிவக் : அதைப்பற்றி நாங்கள் பிறகு யோசிப்பம். நீ முதல் உன்ரை வாழ்க்கைக்கு வழியைப் பார்.

(செல்வி வெறுப்போடு உள்ளே போகிறாள்)

சந்திரன் : நான் நினைக்கிறன் பெரியையா என்ரை வேலைக்கும் மறுமொழி அந்தக் கேள்வியிலைதான் தங்கியிருக்கு.

சிவக் : (கடுமையாக) அப்ப நீ கேள்வியைக் கேட்டுக்-கொண்டிரு (கார்த்திகேசுவிடம்) நீ ஒருக்கால் போன்-பண்ணிக் கேட்டுப்பாரன்.

சந்திரன் : அதிலை ஒரு பிரயோசனமுமில்லை. அது இன்ரவியூ முடிஞ்ச உடனையே றிசல்ட் தெரியும்.

கார்த்தி : என்னவாம்.

சந்திரன் : (தலையாட்டியபடி) ம்;ம்... ...

கார்த்தி : அப்ப நான் போன்பண்ணேக்கை "ஓம் கட்டாயம் செய்யிறன்" என்று சொன்னாரே.

சந்திரன் : அவர் அப்பிடி எத்தினை பேருக்கு ஓம் எண்டு சொல்லியிருப்பார், இன்ஃபுளுவன்சாலை உத்தியோகம் கிடைக்கும் எண்டது வீண்பேச்சு. அதேன் அப்பிடிக் கிடைக்க வேணும். வேலை இருக்கெண்டால் ஏன் இன்ரவியூ?

சிவக் : விசர்க்கதை கதைக்கிறாய் நீ. அந்தந்த உத்தியோகத்துக்கு அந்தந்த ஸ்ரேற்றஸ் (Status) பெசனாலிற்றி (Personality) இருக்க வேணும். இன்ரவியூவும் இல்லாட்டில் காத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தான் எல்லாரும் காலுக்குமேலை கால்-போட்டுக்கொண்டு ஒபிஸ்வளியை இருப்பினம். பிறகு வேலை நடந்தமாதிரித்தான்.

சந்திரன் : உழைப்புக்குப் பெரியையா ஸ்ரேற்றஸ் (status) பெசனாலிற்றி (Personality) இதொண்டும் தேவை-யில்லை.

சிவக் : அதெல்லாம் எனக்கு விளங்குது. நீ முதல் உன்ரை அலுவலைப் பார். (கார்த்திகேசுவைப் பார்த்து) நீ இவரைக்கொஞ்சம் அச்சறுக்கைபண்ண வேணும். அவற்றை போக்கு அவளவு நல்லாயில்லை. (போவதற்கு எழுந்தபடி சந்திரனைப் பார்த்து) இஞ்சார்... ... நீ அவளொருத்தியைக் கொண்டந்து வீட்டிலை வச்சிருக்-கிறாய். கொஞ்சம் பொறுப்பாய் நட. தேவையில்லாத வீண் விஷயங்களிலை நேரத்தைச் செலவழியாதை. (கார்த்திகேசுவிடம்) நான் வாறன். நீ இதை அக்கறை-யாய்ப் பார்.

கார்த்தி : ஓம் அண்ணை.

*(சந்திரன் மௌனமாக நிற்கிறான். சிவக்கொழுந்து போகிறார். போகும்போது அவர் இருந்த கதிரையையும் அப்புறப்படுத்துகிறார். போனதும் கார்த்திகேசு சந்திரன் பக்கம் திரும்பி.)*

கார்த்தி : நான் இந்த முறை கட்டாயம் நம்பியிருந்தன். இனி என்ன செய்யிறது பறுவாயில்லை. அடுத்தமுறை பாப்பம். (யோசித்து ஆறுதலாய்ப் பேசுகிறார்) செல்வியும் கொஞ்சம் கூடக் கவலைப்படுகிறாள்... ... அவளுக்கும் மனதிலை எத்தினை ஆசைகள் இருக்கும். தேவையில்லாத ஆடம்பரத்துக்கு அவளென்ன விரும்பிறவளோ, இல்லைத்தானே, நீயும் ஒரு உத்தியோகத்திலை இருந்தால் அவளுக்கு அது ஒரு பெலம்... அவளும் நாலுபேருக்கு முன்னாலை தலையை நிமித்திப் பெருமையாய்ப் போவாள். (மௌனம், சிறிது நேரத்திற்குப்பின் அதுதான் நான் யோசிக்கிறன். எங்கை எண்டாலும்... .... ஒரு நல்ல வேலை கிடைக்கும் வரைக்கும்... ... . ரெம்பறறியாய் ஒரு சின்ன உத்தியோகத்தையாவது செய்யன்.



சந்திரன் : (ஆறுதலாக ஆனால் உறுதியான குரலோடு) செல்வியைச் சந்தோஷமாய் வைச்சிருக்கிறதுக்கு... ... அல்லது ஒரு நல்ல குடும்பத்தை வளர்க்கிறதுக்கு... ... எனக்கென்ன விருப்பம் இல்லை எண்டோ நீங்கள் நினைக்கிறியள். நான் கஸ்டப்படுகிறது, நான் கவலைப்-படுகிறது, நான் யோசிக்கிறது எல்லாம் எனக்காகவோ செய்யிறன். இல்லையே. அவளுக்கும் சேர்த்துத்தான் செய்யிறன். உங்களுக்கு அவள் ஒருத்தியின்ரை கஸ்டம்தான் கண்ணுக்குத் தெரியுது. ஆனால் நான் போற இன்ரவியூக்களிலை, எத்தனை குடும்பம், இதைவிடக் கேவலமான நிலையிலை இருந்து கஷ்டப்-படுகிறது என்ரை கண்ணுக்குத் தெரியுது. (யோசித்து) ஏன் கஸ்டப்பட வேணும்? அவை செய்த குற்றம்தான் என்ன? (யோசித்தபடி நின்று சிறிது நேரத்திற்குப் பின்) சின்ன உத்தியோகம் பார்க்கிறதாலையோ அல்லது இன்ரவியூக்களுக்கு ஏறி இறங்கிறதாலையோ இதுக்கெல்லாம் தீர்வு கிடைக்கும் எண்ட நம்பிக்கை எனக்கில்லை. இதுக்கெல்லாம் தீர்வு வேறை எங்கையோ இருக்குது.

*(சொல்லியபடியே அவன் போகிறான். போகும்போது மற்றக்கதிரையையும் அவன் அப்புறப்படுத்துகிறான். மற்ற ஒளிவிளக்குகள் மங்கி மறைய ஒளிப்பொட்டு மாத்திரம் இப்போது பிரகாசிக்கிறது. இந்தப் பொட்டில் கார்த்திகேசு நின்றபடியே கீழ்வரும் வசனங்களைப் பேசி நடிக்கிறார். "தனிஆள்" நடிப்பானதால் கொஞ்சம் கூடுதலான பாவனையோடும் ஆறுதலாகவும் கீழ்வருவது செய்யப்பட வேண்டும்.)*

கார்த்தி : (சந்திரனின் கடைசி வார்த்தைகளை கிரகித்து அதைப்பற்றி யோசித்தவராக) அவன் சொல்லுறதும் சரிபோலத்தான் கிடக்குது. எனக்கு அவன் ஒரு பிள்ளை. ஊருக்கு அவனைப்போலை எத்தினை பிள்ளைகள். அதுக்கென்ன செய்யிறது. அவள் செல்வி எங்களை நம்பித்தானே வந்தவள். இன்னும் நாங்கள் இருக்கிறம் எண்ட துணிவிலைதானே அவள் எல்லாத்தையும் பொறுத்துக்கொண்டும் தன்ரை ஆசைகளை அடக்கிக் கொண்டும் இருக்கிறாள். அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்படக்கூடாதோ? ஏன் ஆசைப்படக்கூடாது? ஆசை ஆருக்குத்தான் இல்லை. அவள் இப்ப வாழாமல் எப்ப வாழுறது.

சந்திரன்... ம்... அவன் ... அவன்... சொல்லுறதும் சரி. ஆனால் வேலைக்கு வழி என்ன? அதுமாத்திரம் கிடைச்சால் செல்வியின்ரை கவலை... என்ரை கவலை... எல்லாம் மறைஞ்சு போகும். ம்... (பெருமூச்சு விட்டு) வரும் வரும் எண்டு இருந்து பார்த்துச் சரிவராது. எப்பிடியாவது ஆரையாவது பிடிச்சுச் சரிப்பண்ண வேண்டியது தான்.

(எஞ்சி இருக்கிற கதிரையில் இருக்கும் சால்வையை எடுத்துப் போட்டுக் கொள்கிறார். பின்னர் மேடையில் நடப்பது போன்று பாவனை செய்தபடி,)

கார்த்தி : ம்... ... அவரிட்டைத்தான் போவம்... ... போய்க் கேப்பம் என்ன நடந்ததெண்டு... அது மனிசன் எனக்கு உதவி செய்யும்... ... அப்பிடி நான் செய்ததெல்லாத்தையும் மறந்தே போவார்... ... (நடந்தபடி இருக்கிறார் சிறிது நேரத்திற்குப் பின் நின்று) ஓம் எண்டுதானே சொன்னவர்... ... பிறகேன் அந்தாள் இப்பிடிச் செய்தது... ... (நடக்கிறார்) அவர் வேணும் எண்டு செய்திரார்... ... இப்பவும் இடமிருந்தால் கட்டாயம் தூக்கிப்போடுவார்... ... (பேசாமல் நடக்கிறார்... ... சிறிது நேரத்துக்குப் பின் வீடுகளைத்தேடும் பாவனையோடு நின்று நின்று) எது வீடு... இதாய் இராது.... அதோ... ... (நடந்து நின்று)... இதாயும் இராது... (நடந்து நின்று வாசிக்கிறார்) நாய்கள் கவனம்... ம்;ம்... அவரிட்டை ஒரு நாயும் இல்லையே... .... (நடக்கிறார்)... இதோ... (நிற்கிறார் வடிவாய்ப் பார்த்து) இதுமாதிரித்தான்... கேட்டுப் பாப்பம் (திரும்பி பக்கவாட்டாக நடக்கிறார். வாசலில் நின்று மணியை அமுக்கும் பாவனை. சிறிது நேரத்திற்குப் பின்... கதவு திறந்து உள்ளே இருப்பவரைக் கண்ட பாவனையில்)... ஆ... நல்ல காலம்... ... நீங்களே வந்து கதவைத் திறந்தியள்.... வீடு எனக்குச் சரியாய் ஞாபகமில்லை.... ஓம்... ஓம்... ஒரு ஐமிச்சத்திலைதான் மணி அடிச்சனான்... இல்லை... இல்லை... இருக்கட்டும்... நான்



எடுக்கிறன்... (கதிரையை ஒளிப்பொட்டுள் எடுத்துப் போட்டு இருந்தார்)... நீங்கள் போன்பண்ணுறன் எண்டு சொன்னீங்கள்.... இல்லை பறுவாயில்லை.... அது சரி...அதுசரி... ஓம்... ஓம்... அது கொஞ்சம் கஸ்டம்தான்... ஆர்... ஆ...ஆ.... மினிஸ்டர்... அதுசரி.... அதுசரி... இல்லை... இல்லை.... அதிலை ஒரு கோவமுமில்லை... அதுசரி... அதென்ன செய்யிறது.... என்ன ரிட்டையட் லைப் (Retired Life) மகன்ரை கவலைதான் பெரிய கவலையாக் கிடக்குது. அதுசரி வந்திட்டுது எண்டால் கொஞ்சம் நிம்மதியாய்ச் சாகலாம்... ... ஆ... இல்லை இல்லை இந்த முறை கதிர்காமத்துக்குப் போகேல்லை.... வேறை ஒண்டுமில்லை... மனஞ்சரியில்லை. அடுத்த முறைக்குப் பாப்பம்... அப்ப நீங்கள் ஒருக்கால் இதை மறந்து போகாதையுங்கோ... ... பெரிய உதவியாய் இருக்கும்... நான் வரப்போறன். (எழுகிறார்)... வேண்டாம்... வேண்டாம், வரேக்கை குடிச்சிட்டுத்தான் வந்தனான். அப்ப நான் சொன்னது அடுத்தமுறைக்கெண்டாலும்... அப்பவாறன். (பக்கவாட்டாக நடந்து பாதையில் ஏறி பழையபடி நடக்கிறார்)... ... எங்கிடை கஸ்டகாலம்... ... என்ன செய்யிறது... ... அது மனிசன் நல்ல மனிசன். கட்டாயம் உதவி செய்திருக்கும்... அடுத்த முறை கட்டாயம் செய்வார்... ... (மௌனமாக நடக்கிறார்)... பாப்பம் இவர் எக்கவுண்டன்ற் என்ன சொல்லுகிறார் எண்டு... ... அவேன்ரை பேமிலை (firm) எடுத்துப்போடலாம் எண்டு சொன்னவர்... ... (மௌனம் நடக்கிறார்)... ... பேம் எண்டால் கொஞ்சம் வேலைக் கஸ்டம்தான்... ... அதுக்கு என்ன செய்யிறது... ... உழைப்புக்குத் தகுந்தமாதிரி சம்பளம் குடுத்தாங்கள் எண்டால் பறுவாயில்லை. (மௌனம்,நடக்கிறார்)... ... எல்லாத்தையும் நிற்பாட்டினால் அவங்களும் என்ன செய்யிறது... (மௌனம்) வாற லாபத்திலை சம்பளத்தைக் கூட்டிக்குடுக்கலாந்தான்... (நடந்து டக்கென்று நின்று அங்குமிங்கும் பார்க்கிறார். பிறகு திரும்பி நடக்கிறார். சிறிது தூரம் நடந்தபின் வலப்புறம் திரும்பி நடக்கிறார். மணியை அமத்துவதுபோன்று சைகை, எட்டிப்பார்த்து) ஐயா நிற்கிறாரோ.... எங்கை.... பாத்ரூம் ம்... ஓ கார்த்திகேசு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ.... ஓ.... ஓ....ஓ... ஏ... கார்த்திகேசு வந்திருக்கிறார் எண்டு சொல்லு (கதிரையை இழுத்துப்போட்டு அமர்கிறார். சிறிது நேரம் சுற்றும் முற்றும் பார்க்கிறார். வேறு பாவனைகளும் செய்கிறார். பிறகு சிரித்தபடி எழுந்து கைகொடுக்கிறார். இருந்து) ஏதோ சுகமாய் இருக்கிறம். ஓ... ... அவ இப்ப செத்து திறீ (three) இயேஸ் (years) ஆச்சுது... ... ஓம்... சுகமாய் இருக்கினம்... ... சிவக்கொழுந்தண்ணையோ... ... அவருக்கென்ன சந்தோஷமாய் இருக்கிறார். மகன் இங்கிலண்டுக்குப் போட்டான்... இல்லை கெமிகல் செய்யிறதுக்கு... ... மகளும் போகவேணும் எண்டு ஒரே பிடியாய் நிற்கிறாள்... ...., இல்லை நேசிங் இல்லை எண்டு ஒரே பிடியாய் நிற்கிறாள்... ... இல்லை நேசிங் இல்லை வேறை ஏதாவது படிப்பம் எண்டுதான் சொல்லுறாள்.... ... ஓ... படிக்கட்டுமன்... .... மகனோ? அவற்றை ஒரு விஷயமாய்த்தான் உங்களிட்டை வந்தனான்... ... அவரையும் அனுப்பலாம்தான். ஆள் போகாது போலை கிடக்குது... ... அதுக்காக இல்லை தன்ரை உழைப்பு இந்த மண்ணுக்கு எண்டு சொல்லுகிறார்... ... ஓ... ... நெடுக இன்ரவியூவுக்குப் போறதுதான்... ... ஒண்டும் சரிவருகு-தில்லை... ... அது எனக்குத் தெரியும், கஸ்டம்தான்.... ... அதுக்காக வீட்டிலை இருக்க ஏலுமே... வயலோ.... வயல் செய்யிற உடம்பே அவனுக்கு? வயலுக்குப் போனான் எண்டால் ரெண்டு நாளிலை அவன் ஆஸ்பத்திரியிலைதான் போய்ப் படுப்பான்.... .... இல்லை உங்களாலை ஏலும் எண்டால் பாருங்கோவன். ஏலாட்டில் நான் என்ன செய்யிறது....... நான் அப்ப வாறன்... ... (எழுகிறார். வெளியே நடந்துவந்து வீதியில் ஏறி நடக்கிறார். நடையில் கடுமையும் முகத்தில் கோபமும் காணப்படுகிறது. மௌனமாகச் சிறிது நேரம் நடந்தபடியிருக்கிறார். பிறகு)

வயல் செய்யட்டாம். அதைச் சொல்லுறதுக்குத் தான் அவர் மினைக்கெட்டு பாத்றூமுக்கை இருந்து வந்தவர். (மௌனம், நடக்கிறார், நின்று) வயல் செய்யத்தான் நான் அவனை மினைக்கெட்டு யூனிவேசிற்றிக்கு அனுப்பிப் படிப்பிச்சனான்.... (நடக்கிறார். மௌனம்) ...



உன்னாலை ஏலும் எண்டால் செய்... இல்லாட்டில் பேசாமல் இரன்... வயல்... அந்த நேரம் வீட்டை ஓடி வந்து... தம்பிக்கு... அண்ணைக்கு... மச்சானுக்கு எண்டு கேக்கேக்கை உவருக்கு உதவி செய்தது பெரிய பிழை. (மௌனமாக நடக்கிறார்).... பாப்பம்... பாப்பம்... அதுக்கிடையிலை எங்கடை கைக்கென்ன பெலம் குறைஞ்சா போச்சுது.

(சிறிது நேரம் நடக்கிறார்... பின் நடையில் தளர்ச்சி ஏற்படுகிறது. ஒளியும் ஓரளவு மங்குகிறது. அவர் நடையில் தளர்ச்சி கூடி நெடுநாட்களாக நடக்கும் தளர்ச்சி நடையில், உடல் அசைவில், பார்வையில், பேச்சில் தெரிகிறது. நடந்த படியே பேசுகிறார். பேச்சு சோர்வாக விரக்தியோடு பேசப்பட வேண்டும்)

ம்... (பெருமூச்சு விட்டபடி) நானும் நெடுக நடக்கிறன்.... தெரிஞ்சவையின்ரை வாசல்படி ஏறி இறங்கியாச்சு... நடக்கத் தொடங்கி வருசமும் ரெண்டாய்ப் போய்ச்சுது. (நின்று கைகால்களைப் பார்க்கிறார். வியர்வையை ஒற்றித் துடைக்கிறார். மேலும் கீழும் சுற்றுப் புறமும் பார்த்து விட்டு மீண்டும் நடக்கிறார். நடையில் கூடுதலான தளர்ச்சி, ஒளி மேலும் குறைக்கப்-படுகிறது).... நான் உதவி செய்தவை எல்லாரும் எனக்கு உதவி செய்யாமல் இருக்கினம்.... உதவி செய்ய விருப்பமில்லையோ.... அல்லது உதவி செய்ய முடியாமலிருக்குதோ... அது தான் எனக்கென்னம் விளங்கேல்லை... பாப்பம்... பாப்பம்... (நடக்கிறார்) ம் (பெருமூச்சு விட்டு, நின்று) நானும் நடக்கிறன்... முடிவு தான் என்ரை கண்ணுக்கு என்னும் தெரியேல்லை. (நெற்றியில் கையை வைத்து குனிந்து தூரத்தே பார்க்கிறார். பின்னர் திரும்பி மேடையை விட்டு நடந்து வெளியே போகிறார். ஒளி மங்கி மறைகிறது)

**இருட்டிலே திரை மூடுகிறது**

**இரண்டாம் அங்கம் முடிவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் அங்கம்

### காட்சி : 1

### திரை விலகுகிறது

பின்மேடை நடுப்பகுதியில் மூவர் முழந்தாளிட்டு இருக்க அவர்களுக்குப் பின்னால் மூவர் நிற்கிறார்கள். இந்த அறுவரும் தொழிலாளர்கள். காட்சி ஆரம்பம் ஆகும் போது ஒளிப் பொட்டின் நடுவே இவர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கி வெறித்துப் பார்த்தபடி மௌனமாக இருக்கிறார்கள். சில வினாடிகளுக்குப் பின் நிற்பவர் ஒருவர் மௌனத்தைக் கலைத்து வேதனையோடு பேசத் தொடங்க மற்றவர்களும் விரக்தியோடு தங்கள் தங்கள் வசனங்களைப் பேசுகிறார்கள். வசனம் நேரடியாகச் சபையோரோடு பேசுவதாக அமையக்கூடாது.

*தொழி 1* : வீட்டில் மனிசியும் பிள்ளைகளும் வடிவாய்ச் சாப்பிட்டு மூண்டுநாளாச்சு. சோத்துக்காவது கொஞ்சம் காசைச் சம்பாதிக்கலாம் எண்டு எங்கையாவது கூலி வேலை செய்வம் எண்டா எல்லா இடமும் வேலை இல்லை வேலை இல்லை எண்டுதான் சொல்லுகினம். இப்படியே மற்றவையின்ரை கையை நம்பி வேலை இல்லாமல் எத்தனை நாளுக்குத்தான் சீவிக்கிறது.

*தொழி 2* : இவ்வளவு காலமும் நானும் எங்கிடை ஊர் வேலையாக்கள் எல்லாரும் வயல் கொத்தித் தான் சீவிச்சனாங்கள். அதெல்லாம் எங்கிடை சொந்த வயல்களில்லை. எங்களுக்குச் சொந்தமாய் ஈ எறும்பு இருக்கிற இடங்கூடக் கிடையாது. அல்லது இது எங்கிடை எண்டு உரிமையோடை சொல்லுறதுக்கும் ஒரு பொதுச்சொத்துக் கூடக் கிடையாது. எங்கிடை கொட்டில் எல்லாம் கல்வீட்டுக்காறற்றை காணிகளுக்கைதான் இருக்குது. வயல் கொத்தினால்தான் காசு. இல்லாட்டில் பட்டினிதான். நாங்கள் பாடுபட்டு உண்டாக்கிறதிலை ஒரு கொஞ்சமும் எங்களுக்குக் கிடைக்காது.



*தொழி 3* : நாங்கள் உண்டாக்கிற அதே சாமான்களை பத்து மடங்கு காசு குடுத்துத்தான் நாங்கள் வாங்கிறம். எங்கிடை இந்தஅடிமை உழைப்பு எங்களுக்குக் கொஞ்சச் சோத்தை எண்டாலும் போட்டுது. போன மாசம் பெரிய கல்வீட்டுக்காறர் ஒரு ரக்ரரை (Tractor) வாங்கினார். நாங்கள் இருவதுபேர் ஒரு கிழமையிலை செய்யிற வேலையை அது ஒரு நாளிலை செய்யுதாம். சிலவும் மிச்சம் குறைவாம். எங்களுக்குத் தாற கூலியெல்லாம் இப்ப மிச்சமாம். வயல் கொத்த ஆள் தேவையில்லை எண்டு எல்லாரும் சொல்லிப் போட்டினம். ஏதோ அவையின்ரை காலைப் புடிச்சு எருப்போடுறது, கிளிஞ்சல் பொறுக்கிறதெண்டு கொஞ்சப் பேர் வேலை செய்யினம். முந்தினது மாதிரி வேலையும் இல்லை. கூலியும் இப்ப அரைவாசிதான். மற்றவை எல்லாரும் இப்ப றோட்டிலைதான்.

*தொழி 4* : நாங்கள் முந்தி ஊரவைக்குச் செய்து குடுத்த சாமான்கள் எல்லாத்தையும் இப்ப பெரிய பெரிய கொம்பனிகள் செய்து குடுக்குது. சாமான்கள் நல்ல பெலமாம். கலப்புக் கிலப்புக் கிடையாதாம். விரும்பின மாதிரிச் செய்விக்கலாமாம். விலையும் மிச்சம் குறைவு எண்டுதான் சொல்லினம். என்னாலை அவை சீவிச்சினம். அவையாலை நான் சீவிச்சன். இப்ப பெரியவன் வந்திட்டான். பிறகென்ன (பெருமூச்சோடு) என்ரை கம்மாலையிலை நெருப்பெரிஞ்சு மாசம் ஆறாச்சுது. இப்ப நெருப்பு எங்கிடை வயித்திலை தான் எரியுது.

*தொழி 5* : நான் இவ்வளவு காலமும் தேங்காய் புடுங்கித்தான் சீவிச்சனான். ஒரு மரத்துக்குப் பத்துச்சதம். ஒருநாளைக்கு ஏறி இறங்கினால் ஆகக்கூடினது மூண்டு ரூவாய் கிடைக்கும். நான் விடுகிற மூச்சுக்கு மூண்டு ரூவாய் போதுமோ. சாமான்களின்ரை விலை இப்ப என்ன கொஞ்சநெஞ்சமே. மூண்டுரூவாய் எந்த மூலைக்குக் காணும். மரத்துக்கு இருவத்தைஞ்சு சதம் தாருங்கோ எண்டு கேட்டன். அது தேங்காய் முத்திச் செத்தல் ஆகினால் தானாய் விழும் எண்டு சொல்லுகினம். இப்ப எல்லா இடமும் - தேங்காய் மாத்திரமில்லை - மற்றதெல்லாம் கூடச் செத்தல் ஆகித்தான் விழுகுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழி 6 : வீட்டுக்குவீடு... ... ஊருக்கு ஊர் வேலை இல்லாமல் சனம் திண்டாடுது. வேலை இல்லாமல் இருக்கிறது ஒரு பக்கம். அதோடை சீவிக்கிறதுக்கான சிலவுமெல்லோ கூடுது. அப்பிடியெண்டால் வயல்வழிய வேலை செய்யிற ஏழைகள், கூலி வேலைசெய்யிறவை, தொட்டாட்டு வேலை செய்யிறவை மிருகங்கள் மாதிரி வேலை செய்து குறையச் சம்பளம் எடுக்கிறவை எல்லாரும் எப்பிடிச் சீவிக்கிறது. ஏன் நாங்கள் இப்பிடிச் சீவிக்கவேணும். ஆருக்காக நாங்கள் இப்பிடிக் கஸ்டப்படுகிறம்.

*(தொழிலாளி -6 இன் வசனத்துக்குப் பின் ஒளிப்பொட்டு மங்க அவர்கள் "சிலை" ஆகிறார்கள். இப்போது சேட்டும் லோங்சும் போட்ட நாலுபேர் கையிலை சுருட்டிய மட்டைகளோடு இடப்புறப் படியால் ஏறி மேடைக்குள் பிரவேசிக்கிறார்கள். இவர்கள் முன்மேடை இடப்புறத்தை அண்டி கூட்டமாக நிற்கிறார்கள். இப்போது ஒளிப்பொட்டு இவர்கள்மீது பாய்ச்சப்படுகிறது. படித்த, வேலை இல்லாதவர்களை இவர்கள் குறிக்கிறார்கள். இவர்களின் வசனங்கள் பிரசார உருவத்தில் இருக்கலாம்).*

படித்த 1 : இத்தினை கஸ்டத்துக்குள்ளையும் பெற்றார் ஏன் எங்களைப் படிப்பிச்சவை. ஏதோ எங்கடை கையிலை ஒரு சேட்டிபிக்கேட் எண்டாலும் கிடைச்சால்- அரசாங்கத்திலையோ அல்லது வேறை கொம்பனி-களிலையோ எங்களுக்கு உத்தியோகம் கிடைக்கும் எண்ட நம்பிக்கைதான். அதுக்குப் பிறகு தங்களுக்கும் கொஞ்சம் பாரம் குறையும். நாங்களும் தப்பிவிடுவம் எண்டுதானே அவை நினைக்கினம். இப்ப எங்கிடை கைகளிலை சேட்டிபிக்கேட் இருக்கிறது. (அதை உயர்த்திப் பிடித்தபடி) ஆனால் வேலைதான் இல்லை.

படித்த 2 : என்ரை சேட்டிபிக்கேட் மடிஞ்சுபோய்க் கிடக்குது. அதைப் பெட்டிக்கை பூட்டி வைச்சுக் கனகாலம். உத்தியோகத்தைத் தேடித் திரியேக்கை இதையும் வலு கவனமாய்த் தான் நான் பாத்தனான். நான்- இல்லாட்டிலும் பறுவாயில்லை. இது இருந்தால் உத்தியோகமாவது கிடைக்கும் எண்டு நான் நம்பினன். இப்பவும் இரண்டுபேரும் இருக்கிறம். ஆனால் உத்தியோகம் தான் இல்லை.



ஆகக் களிசான் சேட்டுப்போட்டு வேலைசெய்தால்-தான் உத்தியோகமோ மற்றதொண்டும் உத்தியோக-மில்லையோ... .... பரந்த பூமி இருக்குது... ... அகண்ட ஆகாசமிருக்குது...... வேலையோ இல்லைச் செய்-யிறதுக்கு எண்டு படிச்சவை படியாதவை எல்லாரும் கேட்டினம். (ஆறுதலாக) நான் வயலுக்குப் போனன்...... வேலை செய்யிறதுக்கு. இளம் விவசாயி. நிலம் மட்டும் இருந்தால் போதுமே. எங்களை வழிநடத்திறவைக்கும் மனமும் எல்லோ இருக்கவேணும். ஆகாசம் அகண்டது எண்டு அண்ணாந்து பார்த்தபடியே நிக்கிறம். எங்கிடை வேர்வைதான் சொட்டுச்சொட்டாய் நிலத்திலை விழுகுது. மழையில்லை. தண்ணியில்லை.... பயிரில்லை...

படித் 3 : இது G.C.E சேட்டிபிக்கேட் இல்லை. யூனிவேசிற்றிச் சேட்டிபிக்கேட் எங்கிடை பெற்றார் இன்னும் கொஞ்சம் கூட யோசிச்சினை. கஸ்டப்படுகிறதோடை இன்னும் கொஞ்சம் கூடக் கஸ்டப்பட்டு யூனிவே-சிற்றிக்கு எங்களை அனுப்பினால் பிறகு கஸ்டமே இருக்காது எண்டு G.C.E... O/L, A/L படிச்சு வேலை இல்லை. யூனிவேசிற்றிக்கை பிள்ளைகள் போட்டினம் எண்டால் பிறகு கட்டாயம் வேலை கிடைக்கும் எண்டு அவை நம்பிச்சினம். வாயைக் கட்டி வயித்தைக் கட்டி ஊரெல்லாம் கடன்பட்டு எத்தனையோ பெற்றார் இப்பவும் தங்கிடை பிள்ளைகளைப் படிப்பிக்கினம். அறிவுக்குப் படிச்சனாங்கள் எண்டு சொல்லிக்-கொண்டு.... எங்கிடை நெஞ்சிலை நாங்களே தட்டி..... எங்களை நாங்களே ஏமாத்த விரும்பேல்லை. இஞ்சை நல்ல எதிர்காலம் இல்லை எண்டு போட்டு வெளி-நாட்டானுக்கு கூலி ஆளாய்ப் போகவும் நாங்கள் விரும்பேல்லை. இந்த மண்ணிலை நாங்கள் சீவிக்க வேணும். இந்த மண்ணுக்கு நாங்கள் உழைக்க வேணும். இந்த நாட்டிலையே எங்களுக்கு வேலை வேணும்.

படித் 4 : அவர் ஆட்ஸ் நான் சயன்ஸ். என்ன? சயன்ஸ் ஆக்களுக்கும் வேலை இல்லையோ எண்டு யோசிப்-பியள். இது தனிப்பட்ட ஆக்களின்ரை பிரச்சனை இல்லை. நாட்டின்ரை பிரச்சனையே இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாய்ச் சொன்னால் எங்கள் எல்லாருக்கும் வேலை இல்லை. நாங்கள் எல்லோரும் ஒண்டு. எங்கள் எல்லாருக்கும் வேலை வேணும்.

(இந்த நேரத்தில் தொழிலாளர்கள் ஆறுபேரும் ஒன்றாக)

தொழி : எங்களுக்கும் தான்.

(படித்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ஒன்றும் அறியாது விழிக்கிறார்கள். பின் மாறி மாறி தொழிலாளர்கள் இருக்கும் பக்கம் எட்டி எட்டிப் பார்க்கிறார்கள். படித்தவர் - 3 எல்லோரையும் விலத்தி முன்னுக்கு வந்து மற்றவர்களைப் போகுமாறு சைகை செய்தபடி நெற்றியில் கை வைத்து எட்டிப்பார்த்து வசனத்தைப் பேச மற்றவர்களும் நின்றபடியே எட்டிப்பார்க்க முயற்சிக்கிறார்கள்.)

படித் 3 : (நெற்றியில் கை வைத்து எட்டிப்பார்த்தபடியே) ஆர்.... அது.... ஆர் அங்கை நிற்கிறது.

தொழி : (உரக்க) தெரியேல்லையா.

படித் 3 : (குழப்பத்துடன் மற்ற மூவரிடமும்) பெரிய கூட்டமாய் இருக்குது. ஆர் எண்டு தெரியேல்லை. (தொழிலாளர்களிடம் உரக்க) தெரியேல்லை.... கொஞ்சம் கிட்ட வாருங்கோ.

(தொழிலாளர்கள் எழுந்து இரண்டடி முன்னே வருகிறார்கள். தொழிலாளர்கள் நிற்கும் ஒளிப்பொட்டு மிகப் பிரகாசமாக்கப்படுகிறது. அவர்களைப் படித்தவர்கள் மிக அவதானமாய்த் துருவித்துருவிப் பார்க்கிறார்கள். படித்தவர் - 3 ஒரு அடி முன் வைத்து)

படித் 3 : நீங்கள் எல்லாரும் ஆர்.

தொழி 6 : நாங்கள் வேலை இல்லாத ஏழைகள்.

(திடீரென்று நால்வரும் ஓரடி பின்னடைகிறார்கள். ஒருவரை ஒருவர் குழப்பத்தோடு பார்க்கிறார்கள். படித்தவர் - 3 தங்களுடைய தொகையை எண்ணுகிறார். எண்ணி.... யோசித்து... தலைமட்டும் திருப்பி தொழிலாளர்களைப் பார்க்கிறார். சிறிது நேரத்திற்குப்பின் மெல்ல அவர்கள் பக்கம் திரும்பி ஆச்சரியத்தோடு)



படித் 3 : (ஆச்சரியத்தோடு) இவளவு பேருக்குமோ.

தொழி 3 : ஓம்.

படித் 3 : (யோசித்து சிறிது நேரத்திற்குப்பின் ஆச்சரியத்தோடு)

இத்தனை பேரா - வேலை இல்லாதவர்
இத்தனை பேரா?
படித்த வாலிபர் நாங்கள் மட்டுமே
பரிதவிக்கிறோம் என்றிருந்தோம்
உமக்கும் கூடவா வேலைகள் இல்லை?
படிப்பிலார்க்குமே வேதனையோ?
இத்தனைபேரா - வேலை இல்லாதவர்
இத்தனை - பேரா?

படித்த நாமெலாம் வேலை தேடியே
படிகளில் ஏறி இறங்குகிறோம்
படிப்பிலாதவர் வேலைநாடியே
மூலைகள்தோறும் வாடுகிறார்
இத்தனை பேரா - வேலை இல்லாதவர்
இத்தனை பேரா?

படித்த எம்மைப்போல் வேலை இல்லாதவர்
எத்தனை ஆயிரமோ?
படிப்பில்லாதவர் அவர்களைப் போலவும்
எத்தனை கோடிகளோ?
இத்தனைபேரா வேலை - இல்லாதவர்
இத்தனை பேரா?

அத்தனைபேருக்கும் வேலை இல்லை
அவருக்கும் எம்மைப்போல் நாதியில்லை
இத்தனைபேர் இருந்தும் ஏன் விடிவில்லை
யாமெல்லாம் ஒரு குலம் ஐயமில்லை
இத்தனை பேரா- வேலை இல்லாதவர்
இத்தனை பேரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

("யாமெலாம் ஒரு குலம் ஐயமில்லை" என்ற வசனம் பேசப்படும் போது மற்ற ஒளிவிளக்குகளும் ஒளியைப் பரப்பி மேடை முழுவதையும் ஒளிமயமாக்குகின்றன. இது நடக்கும்போதே சந்திரன் வலப்புறப்படிக்கட்டால் மேடையில் ஏறி முன்மேடை வலப்புறம் நின்றபடி தொழிலாளர்களையும் படித்தவர்களையும் பார்த்துக் கேட்கிறான்.)

சந்திரன் : சினம் கனலும் முகத்துடனே
பழி தீர்க்கும் கருத்துடனே
சேர்ந்து நின்றீர்
முனைந்து நிற்கும் அன்பர்களே,
மூண்ட உங்கள் கோபத்தை
முடுக்கிவிட்ட
சனங்கள் எங்கே? யார் அவர்கள்?
ஒருவரா? பலபேரா?
சதி செய்தாரா?
மனந்திறந்து சொல்லுங்கள்
யார் வரவை நோக்குகிறீர்?
யார் அப்பாவி?

தொழி : உழைப்பதற்கு வலுவிருக்க; உள்ளத்தில் திடமிருக்க பிழைக்க வழி ஏன் இல்லை, பேசுங்கள் தோழர்களே!

படித் : பிழைக்க வழி இல்லாத பிற்போக்கு நிலைமை இங்கு விளைக்க நிலம் இல்லாத வேதனையால் தோழர்களே!

தொழி : உருக்குப்போல் கை இருக்க; உரமான உடலிருக்க கரைச்சல் எமை வருத்துவதேன்? கவலைகள் ஏன் தோழர்களே!

படித் : கரைச்சல் எமை வருத்துவதன் காரணந்தான் யாதெனிலோ உழைப்பதனை ஒருசிலபேர் உறிஞ்சுதல் தான் தோழர்களே.

படித் : ஆழ்ந்தகன்ற அறிவுடையோம்; ஆக்கமுள்ள திறன்-உடையோம்



வீண் மனிதராய் நாங்கள் விடுபட்டோம் தோழர்களே.

தொழி : வீண்மனிதர் போல்நீங்கள் விடுபட்டீர்; உம் அறிவை நீங்கள் எமக்குதவாமல் நின்றுவிட்டீர் ஆகையினால்.

சந்திரன் : வருந்தி நொந்து வேலை செய்தும் வாழ்வில் எங்கள் துயரநிலை திருந்தவில்லை; ஏன்? இதனைத் தேர்ந்-துரைப்பீர் தோழர்களே.

படித்தவர் : திருந்தவில்லை எங்கள் நிலை; திருடுகிறார் எங்கள் துயரநிலை திருந்தவில்லை; ஏன்? இதனைத் தேர்ந்துரைப்பீர் தோழர்களே.

படித்தவர் : திருந்தவில்லை எங்கள் நிலை; திருடுகிறார் நம் உழைப்பை அருந்துகிறார் அதன் பலனை ஆரேரோ ஆதலினால்.

தொழி : வஞ்சமின்றி வேலை செய்தும் வருமானம் கூடவில்லை. கஞ்சியில்லா வேதனை ஏன்? கயவர்கள் ஆர் தோழர்களே.

சந்திரன் : கஞ்சியில்லா வேதனையைக் கட்டி வளர்க்கின்றவர்கள் மஞ்சங்களில் துயிலுகிறார் மது மயக்கில் தோழர்களே.

சந்திரன் : வேலையில்லாதவர் யாவரும் ஒவ்வொரு
வேலை செய்து வாழும்
உரிமை
வென்றெடுப்பதற்கு...........
உழைத்து வாழ்பவர் முயற்சியின் முழுப்பயன்
உயர்வு காண்பதற்கு
வேண்டும்
உதவி தோன்றுதற்கு....

பொருளைப் படைப்பவன் அதன் நலன் முழுவதும்
பொருந்தி லாபம் எய்தும்
உரிமை
பொதுமை ஆவதற்கு......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை சிந்துவோர் தொழில் வளம் மிக
மேன்மை காண்பதற்கு....
வாய்ப்பு
மிகுதி ஆவதற்கு....

படித்தவர் அறிவின் பயன்களை எல்லாம்
உழைப்பவர் பெறுவதற்கு
ஒத்த
உதவிகள் பெறுவதற்கு....

சுழன்று மாய்கிற தொழிலவன் குருதியிற்
சுகிப்போர் சாய்வதற்கு
அவர்கள் தொலைந்தே தீர்வதற்கு.....

சந்திரன் : உழைப்பவன் உயர்ந்திட,
கொழுத்தவன் விழுந்திட
உலகம் யாவையும்
தொழிலவன் சொந்தமாய்,
புதுக்கி மாற்றிட
பொதுமை ஆற்றலில்
புன்மை யாவையும்
பொசுக்கி மாய்திட
வழியே இல்லையா? - ஐயா
வழியே இல்லையா? - தம்பி
வழியே இல்லையா.

தொழி : ஏன் இல்லை.... ஏன் இல்லை...

என்றபடியே முன்னுக்கு வருகிறார்கள். இவர்களுடன் படித்தவர்களும் சேர்கிறார்கள். இவர்கள் இருவரும் வீராவேசமாய் ஆடத் தொடங்குகிறார்கள். ஆட்டத்தின் சாராம்சம்; முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆட்சியையும், அவர் தம் அடிவருடிகளையும் வேரோடு பிடுங்கி எறிந்து நிர்மூலமாக்கி தம் தம் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்று தொழிலாளர் கூறுவது போல் இருக்க வேண்டும். ஆட்டம் வீராவேசமாய் அதில் காட்டப்படும் ஆட்டக் குறிப்புகள், பாவனைகள் மேற்கூறிய தன்மைகளை வெளிப்படுத்துவதாய் அமைய வேண்டும். ஆட்டத்தின் நடுவிலே சந்திரனும் சேர்ந்து, ஆட்டம் முடியுந் தறுவாயில் வீராவேசமாய் ஆடுகிறான். ஆடியபடியே அவர்கள் மேடையை விட்டு வெளியே போகிறார்கள்.



## முதலாம் காட்சி முடிவு

## காட்சி : 2

முதலாம் காட்சியின் முடிவில் தொழிலாளர்களும் மற்றவர்களும் ஆடிக்கொண்டே மேடையை விட்டுப்போனதும் மேடையில் ஒளி இலேசாக மங்கப்படுகிறது. ஜன்னலை உடைய சட்டப்படல் பின்மேடை வலப்புறத்தில் இருந்தும், கதவு நிலைச்சட்டம் ஆகியவற்றைக் கொண்ட சட்டப்படல் பின்மேடை உட்புறத்திலிருந்தும் அசைந்து மேடை நடுவில் சந்திக்கின்றன. இப்போது சைக்குளோறாமாவிற்கும் சட்டப்படல்களுக்கும் இடையே உள்ள பகுதி ஒரு தெருவைக் குறிக்கும். மூன்று பிரம்புக் கதிரைகளும் ஒரு ஸ்ரூலும் மேடையின் வலப்புறத்தை அண்டி வைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தட்டித் துடைத்த பின் அவற்றைப் பார்த்து ஒரு நீண்ட பெருமூச்சு விடுகிறாள் செல்வி. பின் கதிரையில் இருந்து வீட்டைச் சுற்றிப் பார்க்கிறாள். பார்த்த பின், ஸ்ரூல் மீதிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து பக்கங்களைப் புரட்டுகிறாள்.

இப்போது சந்திரன் உள்ளே வருகிறான். அவன் கையில் இரண்டொரு புதினத்தாள், துண்டுப் பிரசுரக் கட்டொன்று, சில மட்டைகள் ஆகியன இருக்கின்றன. அவற்றை அவன் ஸ்ரூல்மீது வைத்து தனது வசனங்களைப் பேசுகிறான். செல்வி அவன் சொல்வதைக் கவனியாது புத்தகத்தை ஊன்றிப் படிக்கும் பாவனையில் ஆனால் ஒன்றையும் கிரகிக்கும் தன்மையில்லாமல் முகத்தை "உம்" என்று பிடித்தபடி இருக்கிறாள். அவள் முகத்தில் கோபக்குறி தெரிகிறது. சந்திரன் வசனங்களைப் பேசும்போது இந்த கோபம் படிப்படியாக கூடிக்கடைசியில் அவள் "விடு"க்கென எழுந்து உள்ளேபோக எத்தனிக்கிறாள். அவளின் அதிருப்தியை கதிரையில் இருந்தபடியே பல பாவனைகளாலும் அசைவுகளாலும் தெரிவிக்-கலாம்.

சந்திரன் : (சாமான்களை ஸ்ரூலில் வைத்தபடி உற்சாகமாக) எங்கிடை போராட்டத்தைப்பற்றிய அறிக்கை பேப்-பரிலை வந்திருக்குப் பார் செல்வி... ... சிலபேருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரமாயுமிருக்கும்... ... ... இந்த அறிக்கேலை இருக்கிற சிறப்பெண்ணண்டால் செல்வி.... (செல்வியின் அதிருப்தி) நாங்களும் இருக்கிறம் எண்டு காட்டுறதுக்காக நேரத்துக்கு நேரம் மற்றவை விடுகிற அறிக்கை மாதிரியில்லை இது. அரசாங்கம் மனம் வைச்சால்

சந்திரன் : வேலை இல்லாத பிரச்சனையைத் தீர்க்கலாம்... ... அதைத் தீர்க்கிறது அதுகின்ரை கடமை... ... தீருங்கோ.... ... எண்டு நாங்கள் கேக்கேல்லை... ... மாறாய்... ... முதலாளித்துவ அடிப்படையிலே அமையில் எந்த அரசாங்கத்தாலையும் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது எண்டுதான் நாங்கள் எடுத்துக்காட்டி-யிருக்கிறம். வேணுமெண்டால் அங்கை இஞ்சை எண்டு ஒரு ஆயிரம் இரண்டாயிரம் பேருக்கு வேலை கொடுக்கலாம்... ... ஆனால் அந்த மாதிரிக் குடுக்கிறது கட்டாயம் எல்லாரும் வேலை செய்ய வேணும் எண்ட அவசியத்தைப் பொறுத்துச் செயல்படுகிறதில்லை... ... ... சும்மா ஒரு கண்துடைப்புக்காக... ... சனத்தின்ரை வெறுப்பையும் கோவத்தையும் கொஞ்சம் சம்பந்தப்-படுத்தி வேறைபக்கம் திருப்பிறதுக்காகச் செய்யிறது... ... ஆனால் நாங்கள் வேலை தா எண்டு கேக்கேல்லை... ... ஆட்சி முறையை மாற்றி அமைக்கவேணும் எண்டு சொல்லுறம்... உழைக்கிற ஏழைக்குத்தான் இந்த நாட்டை ஆளுற உரிமையும் இருக்குது எண்டு சொல்லியிருக்கிறம்... ....

(செல்வி விடுக்கென எழுந்து உள்ளே போவதற்கு விரைகிறாள்)

சந்திரன் : ஏன் செல்வி எழும்பி ஓடுகிறாய்... ... உனக்கு இந்த மாற்றத்திலை விருப்பமில்லையா?

செல்வி : நீங்கள் அலம்பிறதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கத் தான் என்னை இஞ்சை கொண்டுவந்து வச்சிருக்கிறியளோ.

சந்திரன் : அலம்பிறனா. ஒரு முக்கியமான பிரச்சனையைப் பற்றி ஆராயிறன் செல்வி.

செல்வி : ஆராயிறதுக்கு வேறை இடம் கிடைக்கேல்லையோ.



சந்திரன் : பிரச்சனை இருக்கிற இடம்தான் செல்வி புரட்சி இருக்கிற இடம். உன்னைப் புரட்சியின்ரை ஒரு சாயலாய்த்தான் நான் பாக்கிறன். அதாலை இந்தப் பிரச்சனையை உன்னோடை கலந்து ஆராஞ்சு உன்னையும் எனக்கு உதவியாய்ச் சேர்க்கலாம் எண்டுதான் நான் விரும்பிறன்.

செல்வி : (கோபத்தோடு) ஆ... ... ஒரு பெரிய புரட்சியை வீட்டுக்கை செய்யலாம் எண்டு யோசிக்கிறியளோ. வெறுங்கை முழம் போடாது.

சந்திரன் : (விளங்க வைக்கும் தோறனையில்) நாட்டிலை புரட்சி துவங்கி அது வீட்டுக்கு வாறேல்லைச் செல்வி. வீட்டிலைதான் அது முதல் துவங்குது.

செல்வி : எங்கிடை வீட்டிலை அது வடிவாய்த் தெரியுது.

சந்திரன் : நீ என்ன செல்வி. எதுக்கெடுத்தாலும் மறுமொழி சொல்லிக்கொண்டிருக்கிறியே தவிர அதை விளங்கிறதுக்குத் தெண்டிக்கிறாயில்லையே.

செல்வி : நீங்கள் எனக்கு விளங்கிறதுகளைப் பற்றிக் கதைச்சால் எல்லோ விளங்கும்.

சந்திரன் : இதிலை விளங்கிறதுக்கு என்ன இருக்குது. நீ பிரச்சனைகளின்ரை வெளிப்பரப்பிலை நிண்டு கொண்டு அதைப் பார்க்கிறாய். நான் அதுகின்ரை உண்மையான தன்மையைக் காட்ட உன்னை உள்ளுக்கு வரச்சொல்லிக் கூப்பிடுறன்.

செல்வி : (ஆத்திரத்துடன்) உண்மை என்ன உண்மை. நீங்கள் குடும்பப் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுறியள். அதுதான் உண்மை.

சந்திரன் : (கடுமையாக) பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுறனோ.

செல்வி : பின்னை என்ன. ஒவ்வொரு நாளும் திரிஞ்சுபோட்டு வரேக்கை என்ன உத்தியோகத்தோடையே வாறியள்.

சந்திரன் : உத்தியோகம்... ... உத்தியோகம்... ... அதொண்டுதான் உனக்குக் கண்ணுக்கு முழிப்பாய்த் தெரியுது. அது கிடைக்கிறதுக்கு நீ வழியைக் காட்டு நான் செய்யிறன்.

செல்வி : அதையும் நான்தானோ காட்டவேணும். கலியாணம் செய்ய முந்திக் கேட்டிருந்தால் சரியான வழியைக் காட்டியிருப்பன். அது முடிஞ்சு இப்ப நாலு வருசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் : (வெறுப்பாக) நான் இன்னும் அதை மறக்கேல்லை.

செல்வி : ஆ... ... அப்ப கலியாணம் முற்றாக்கேக்கை மாமா அவை இரண்டுபேரும் சொன்னதை மறந்து போனி-யளாக்கும்.

சந்திரன் : என்ன சொன்னவை.

செல்வி : ஒரு மாசத்திலை வேலை கிடைக்கும் எண்டு.

சந்திரன் : இப்ப உனக்கு வடிவாய்த் தெரியுதுதானே வேலை கிடைக்கேல்லை எண்டு.

செல்வி : அது எனக்கு வடிவாய்த் தெரியுது. அப்பிடிக் கிடைக்-காதெண்டால் ஏன் பொய் சொல்லிஆக்களை ஏமாத்த வேணும்.

சந்திரன் : அதை நீ அவேற்றை எல்லோ கேக்கவேணும்.

செல்வி : கலியாணம் முடிக்கும்வரைக்கும் எல்லாரும் ஒண்டு. இப்ப நீங்கள் வேறை. அவை வேறையோ.

சந்திரன் : நான் அப்பிடிச் சொல்லேல்லை. நீதான் அப்பிடி என்னைச் சொல்ல வைக்கிறாய்.

செல்வி : ஓ... ... இப்ப அந்தக் குற்றத்தையும் நான்தானோ செய்தது.

சந்திரன் : பின்னை என்ன? நான் வேலைவேலை எண்டு ஓடித் திரிஞ்சதெல்லாம் எனக்காக மட்டும்தானோ. உத்தியோகம் கிடைச்சால் அதிலை உனக்குப் பங்கில்லையோ.

செல்வி : ஓடித் திரிஞ்ச கதைகளைப்பற்றி இப்ப ஏன் கதைக்-கிறியள். இப்பதான், நீங்கள் ஒரு இன்ரவியூவுக்குப் போறேல்லையே.

சந்திரன் : ஓம் போறேல்லை... ... ஏன் போறல்லை. அதிலை எனக்கு நம்பிக்கை இல்லை.

செல்வி : (ஏளனமாக) இப்ப பின்னை உங்களுக்கு எதிலை நம்பிக்கை.

சந்திரன் : அந்தக் கேள்வியைக் கொஞ்சம் வடிவாய்... ... ஆறுதலாய்... ... ஆத்திரப்படாமல் கேள். அது முக்கியமான கேள்வி. வேலை எண்டது கண்ணை மூடிக்கொண்டு கருவிலை பாவப்பிள்ளைப் பதிச்சு இந்தா பிடி இந்தா பிடி எண்டு குடுக்குமாப் போலை இல்லை. அதைச் செய்யிறதுக்கும் ஒரு அவசியம் இருக்கவேணும்.



செல்வி : ஆர் இப்ப உங்களை அவசியமில்லாமல் வேலை செய்யச் சொன்னது.

சந்திரன் : நான் சொல்லுற அவசியம் ஒரு தத்துவம். நான் சொல்ல வந்தது என்னெண்டால் பொருளில்லாமல் மனிசன் சீவிக்க ஏலாது. தன்ரை வாழ்க்கையையும் அவன் முன்னேற்ற ஏலாது. பொருளை உற்பத்தி செய்-யிறதுக்கும் ஒரு நோக்கம் இருக்க வேணும். உற்பத்தி செய்யிறதாலை ஏற்படுகிற செல்வம் உழைக்-கிறவனிட்டையே திரும்பிப்போகவேணும். அப்பதான் அவனும் தேவைக்கு ஏற்றமாதிரிப் பொருளைக் கூடக்கூடச் செய்வான். உற்பத்தி பெருக வேலை-செய்யிற வாய்ப்பும் பெருகும். வேலை இல்லை எண்ட பேச்சுக்கே இடமிருக்காது. உற்பத்தி செய்யப்படுகிற பொருள் உழைக்கிறவரிட்டைப் போகாமல் ஒரு இடத்திலேயோ அல்லது அதுமாதிரிப் பல இடங்-களிலையோ சேரத்துவங்கினால் பிறகு உற்பத்தியான செல்வம் அதை உண்டாக்கிறவனையே அடிமைப்-படுத்திப் போடும். கொஞ்சம்கொஞ்சமாய் அவனை உறிஞ்சி அவன்ரை உயிரையே குடிச்சிடும். பிறகென்ன கொஞ்சப்பேருக்கு சொகுசான சீவியம். மற்றவை எல்லாருக்கும் பசி... பட்டினி... வேலையில்லாத் திண்டாட்டம்.... அதுதான் நான் நெடுகச் சொல்லுறது... இது என்ரை தனிப்பட்ட பிரச்சினை இல்லை... நாட்டின்ரை பொதுப் பிரச்சினையே இதுதான்... ... ...

செல்வி : அப்ப பிறகென்ன அவை எல்லாருக்கும் வேலை கிடைக்கும்வரைக்கும் பார்த்துக்கொண்டு இருங்கோவன்.

சந்திரன் : (கோபத்தோடு) எனக்கு வேலை கிடைக்கிறதாலை நாட்டிலை வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லாமல் போகாது.

செல்வி : உங்களுக்கு நாட்டைப்பற்றியும் ஊரைப்பற்றியும்தானே கவலை, நானொருத்தி வீட்டை இருக்கிறன் எண்டதைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் : உன்னைப்பற்றி நான் கவலைப்படாமல் வேறை ஆர் கவலைப்படுகிறது.

செல்வி : ஏன் உபசாரத்துக்குக் கதைக்கிறியள். என்னைப் பற்றின அக்கறை உங்களுக்கு எப்ப வந்திது. நான் சந்தோசமாய் இருக்க வேணும் எண்டு நீங்கள் எப்ப யோசிச்சனீங்கள்.

சந்திரன் : நீ என்ன செல்வி சொல்லுறாய். எனக்கு இருதயமே இல்லை எண்டா நீ நினைக்கிறாய். என்ரை முயற்சிகளோடையும் விருப்பங்களோடையும் பங்கு கொள்ளுறதுக்கு நீ தானே விரும்புறாயில்லை. அதிலை ஒரு சுகத்தைக் காணுறதுக்கு நீ தானே மறுக்கிறாய்.

செல்வி : உங்கிடை முயற்சிகள்... ... விருப்பங்கள்... அதிலை சுகம்... அதெல்லாம் எப்ப... (கவலைக்குள்ளானவளாய்) அண்டைக்கு என்னோடை படிச்ச வசந்தியை... மாக்கற்றடியிலை சந்திச்சன்... ... கார் முன் சீற்றிலை இருந்தவள்... ... முதலே கண்டிருந்தால் மற்றப் பக்கம் திரும்பியிருப்பன்... ஆனால் அவள் கண்டிட்டாள்... ... ஒரு டொக்டரை கலியாணம் கட்டியிருக்கிறாளாம்... ... தன்ரை வீட்டை வரச்சொல்லிக் கூப்பிட்டாள்.

சந்திரன் : கூப்பிட்டால் போறது தானே. நான் உன்னை என்ன மறிச்சனானோ?

செல்வி : நான் எந்த முகத்தோடை அவளிட்டைப் போறது. என்ரை புருசனுக்கு வேலை இல்லை. வீட்டிலை தான் இருக்கிறார் எண்டு சொல்லுறதுக்கு நான் அவளிட்டைப் போக வேணுமோ?

சந்திரன் : அதிலை என்ன வெக்கம். உனக்குச் சொல்ல வெக்கமாய் இருந்தால் நானும் வாறன். நான் சொல்லுறன்.

செல்வி : வேலை இல்லை எண்டது உங்களுக்கு ஒரு குறையாய் இருந்தால் தானே அதைப்பற்றிக் கதைக்கிறதுக்கும் கூச்சப்படுவியள். உங்கிடை சோம்பேறித் தனத்துக்கு அது ஒரு சாட்டெல்லோ.

சந்திரன் : சோம்பேறித்தனமோ? வீட்டிலை இருந்து கொண்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டோ நான் இருக்கிறன். செல்வி, இருக்கிற ஒண்டை என்னட்டைக் கேட்டால் அது எனக்கு விளங்கும். நான் தாறன், ஆனால் இல்லாத ஒண்டை என்னட்டைக் கேட்டால் நான் என்ன செய்யிறது.



செல்வி : இல்லாதது என்ன. ஒரு புருசனுக்குக் கட்டாயம் இருக்க வேண்டியதைத் தானே நான் கேக்கிறன். இந்த வீட்டை வந்த நாலு வருஷத்துக்கையும் நான் என்ன சுகத்தை அனுபவிச்சனான்.

சந்திரன் : இந்த வீட்டிலை உனக்கு என்ன குறை. அப்படி என்ன குறையை நாங்கள் விட்டனாங்கள்.

செல்வி : நாங்கள் எண்டு ஏன் நீங்கள் எல்லாரையும் சேர்க்கிறியள். நான் எண்டு கேளுங்கோவன். சோறும் சீலையும் எனக்குத் தர வழியில்லாமலோ அப்பா எனக்கு கலியாணம் செய்து வைச்சவர்.

சந்திரன் : செல்வி... ... (கோபமாக)

செல்வி : (விம்மியபடி) என்ரை விருப்பு வெறுப்புக்களைப் பற்றி ஆருக்கு என்ன கவலை. ஒவ்வொரு நாளும் அணுவணுவாய் நான் சாகிறன். ஒரு கூண்டுக்கிளி மாதிரி என்னை வைச்சு எல்லாரும் சுற்றிவர நிண்டு வேடிக்கை பாக்கிறயள். போதும் உங்கிடை பாசாங்கு... உங்கிடை விளையாட்டை நீங்களே நடத்துங்கோ... ... அதுக்கிள்ளை இருந்து சித்திரவதைப்பட்டுச் சாக என்னாலை ஏலாது. எனக்கது அவசியமாயும் தெரியேல்லை... ... நான் அப்பாட்டைப் போகப்போறன்.

சந்திரன் : நீ அப்பாட்டைப் போறதாலை உன்ரை பிரச்சனை தீருமா செல்வி.

செல்வி : (கோபமாக) உங்களுக்குப் பிரச்சனை இல்லாமல் போகும்.

சந்திரன் : நீ உன்னைப்பற்றித்தானே நெடுகக் கவலைப்பட்டுக்-கொண்டிருக்கிறாய்.

செல்வி : (கோபமாக) ஊரைப்பற்றிக் கவலைப்படத்தான் நீங்கள் இருக்கிறீங்களே. பிறகென்ன?

சந்திரன் : உன்னையும் என்னோடை சேரச்சொல்லித்தானே நான் கேக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி : ஏன் உங்களோடை சேர்ந்து ஊர் சுற்ற ஆள் காணாதெண்டோ. நானும் உங்களோடை சேர்ந்தால் பிறகு வீட்டைப்பற்றிக் கவலைப்படத்தேவையில்லை எண்டதுக்கோ.

சந்திரன் : (கோபமாக) செல்வி... ... அவ்வளவு பொறுப்புணர்ச்சி இல்லாமல் நான் இருக்கேல்லை.

செல்வி : தெரியும் நாலு வருசமாய் நான் அதைப் பாத்திட்டன். பொறுப்புணர்ச்சி இல்லாத சோம்பேறித்தனம்.

சந்திரன் : (மிகவும் கோபமாக அவளை நெருங்கி) என்ன சொன்னனீ... ...

(இந்த நேரம் சிவக்கொழுந்தும் கார்த்திகேசுவும் உள்ளே வருகிறார்கள். நடப்பதைக் கண்டு கார்த்திகேசு பதட்டத்துடன்,)

கார்த்தி : டேய்... ... சந்திரன்.

செல்வி : மாமா (என்றபடி கார்த்திகேசுவுக்குக் கிட்டப்போய் விம்முகிறாள்)

சிவக் : (கோபமாக) இப்ப ஏன் அவளிலை தொட்டனி.

சந்திரன் : ஆர் தொட்டது கண்டனீங்களே.

சிவக் : தொடாமல் இப்ப என்ன கொசுவோ கலைச்சனி.

சந்திரன் : உங்கிடை வேலையை நீங்கள் பாருங்கோ. இது குடும்ப விஷயம்.

சிவக் : (ஏளனமாய், ஆனால் கடுமையாக) ஆ.... அப்ப அது ஒண்டு இருக்கிறது உமக்கு இப்ப தெரியுது.

சந்திரன் : நீங்கள் சும்மா தேவையில்லாமல் கதைக்காதையுங்கோ.

சிவக் : (கிட்ட நெருங்கி) உமக்கிப்ப நான் கதைக்கிறதெல்லாம் தேவையில்லாதது மாதிரித்தான் படுகுதோ.

செல்வி : (வெறுப்பாக) நாங்கள் எல்லாம் இப்ப அவருக்குத் தேவை இல்லாத ஆட்கள்.

சந்திரன் : (அவளிடம் கோபமாக) நான் இப்ப அப்படிச் சொன்னனானே.



சிவக் : நீ என்ன சொல்லுறது. நீ செய்யிற வேலை முழுக்க அப்படித்தானே இருக்குது.

கார்த்தி : கொஞ்சம் பொறுங்கோ அண்ணை. (சந்திரனைப் பார்த்து) இப்ப என்ன நடந்தது.

சந்திரன் : நடக்கிறது என்ன. வேலைக்குப் போ போ எண்டால்... நான் எங்கை போறது. செய்யிறதுக்கு வேலை-யுமெல்லோ இருக்க வேணும்.

சிவக் : அதையும் இப்ப உமக்கு நாங்கள் தானோ காட்ட வேணும். அவளைக் கொண்டு வந்து வீட்டிலை வைச்சிருக்கிறாய். நாளைக்கு ஒரு குடும்பத்தை நடத்த வேணும் எண்ட அக்கறை உனக்கு இருந்தால் எல்லோ.

செல்வி : அந்த அக்கறை இருந்தால் இப்ப ஏன் இந்த நிலமை.

கார்த்தி : அதுக்கு அவன் என்ன செய்யிறது. அவனும் முயற்சி எடுக்காமலோ இருந்தவன்.

சிவக் : அவன் கெட்டது உன்னாலை. மூண்டு வேளையும் நேரத்துக்கு நேரம் நீ சாப்பாடு போடப் போய்த்தான் அவன் இப்ப இப்பிடி இருக்கிறான். அந்த நேரமே தன்ரை வழியைப் பாக்கச் சொல்லி நீ அவனை அனுப்பி-யிருந்தால் உப்பிடி நிண்டு உடம்பை அலட்டான்.

சந்திரன் : பெரியையா நீங்கள் வந்தால் வந்த வேலையைப் பாருங்கோ. உங்களுக்குத் தேவை இல்லாத விஷயத்-திலை தலையிடாதையுங்கோ.

சிவக் : தேவை இல்லாத விஷயம், என்னடா தேவை இல்லாத விஷயம். ஆரைக் கேட்டு பேப்பரிலை அறிக்கை விட்டனி.

சந்திரன் : சங்கத்தின்ரை செயலாளர் நான். சங்கத்தின்ரை சார்பிலை அறிக்கையை நான் வெளியிடாமல் வேறை ஆர் வெளியிடுறது.

சிவக் : நீ இருக்கிற நிலவரத்திலை அது ஒண்டு தான் இப்ப குறை... ... விடுகிறதை ஒரு லட்சணமாய் மரியாதையாய் விடு... ... சமுதாயத்தை மாத்தப் போகினமாம்... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்தி : சந்திரன்... ... நீ ஏன்ரா உன்னை இதுகளுக்கை கொண்டு போய் மாட்டுகிறாய். இதுகளாலை வாற கஸ்டங்களைப் பற்றி முன்னுக்குப் பின்னுக்கு யோசிச்சியா?

சந்திரன் : என்ன கஸ்டம்?

சிவக் : என்ன கஸ்டமோ?

கார்த்தி : நீங்கள் பொறுங்கோ அண்ணை. சந்திரன், இப்பவே உனக்கு வேலை கிடைக்கிறது கஸ்டமாயிருக்குது. ஏதோ தன்மையாய் அவரை இவரைப் பிடிச்சு ஒரு வேலையை எடுக்கிறதை விட்டுட்டு இப்பிடியான அறிக்கைகளையும், ஆர்ப்பாட்டங்களையும் செய்தால் உதவி செய்ய முன்னுக்கு வாறவையும் செய்ய மாட்டினம் தம்பி.

சந்திரன் : துவக்கத்திலை நானும் உப்பிடித்தான் யோசிச்சனான் ஐயா. ஆனால் போகப் போகத்தான் உது ஒரு பிழையான நினைப்பெண்டு எனக்கு விளங்கிச்சுது. நாலு பேரைக் காக்கா பிடிச்சு உத்தியோகம் எப்பிடியும் எடுக்கலாம் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் ஏன் அப்பிடி எடுக்க வேணும். உழைக்கிறது என்ரை உரிமை. அந்த உரிமையை எனக்குத் தாறது அரசாங்கத்தின்ரை கடமை.

செல்வி : உரிமையையும் கடமையையும் பற்றித்தான் உங்களுக்கிப்ப கவலை. ஒரு குடும்பத்தைக் குறை ஒண்டும் இல்லாமல் பாக்க வேணும் எண்டது உங்கிடை கடமை இல்லையோ?

சந்திரன் ; அது என்ரை கடமைதான் ஆர் இல்லை எண்டு சொன்னது. என்ரை கடமையை நான் செய்யிறதுக்கு எனக்குப் பொருள் பண்டம் தேவை. பொருள் பண்டத்தைச் சம்பாதிக்க நான் உழைக்க வேணும். உழைக்கிறதுக்கு எனக்கு ஒரு வேலை இருக்கவேணும்.

செல்வி : அதைச் செய்யச் சொல்லித்தானே நாங்களும் சொல்லுறம்.

சந்திரன் : செல்வி... ... ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது எண்டு சொல்லுவினம். வாயாலை வேலை செய் வேலை செய் எண்டு சொன்னால் போதுமே. செய்யிறதுக்கு எங்கை இருக்குது வேலை. நான், மார்க்கண்டன், கந்தசாமி இன்னும் எங்களைப்போலை எத்தினை லட்சம் பேருக்கு வேலை இல்லை.



செல்வி : அவை எல்லாரையும் பற்றி உங்களிட்டை ஆர் இப்ப கேட்டது.

சந்திரன் : செல்வி... அடுக்களையிலை சட்டிபானை எல்லாம் வெறுமையாய்க் கிடக்கேக்கை எனக்கு விருந்து வை எண்டு நான் உன்னைக் கேட்டால் நீ என்ன செய்வாய்?

செல்வி : (மௌனம்)

கார்த்தி : அது சரி மோனை. இல்லாததைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருந்தால் என்ன ஆகப் போகுது. இப்பிடியே நெடுக நாளைக் கடத்திக் கொண்டு போக ஏலுமோ?

சந்திரன் : நாள் போகுது எண்டதுக்காக வெறும் வாயை மெண்டு கொண்டு நான் உத்தியோகத்திலை இருக்கிறன் எண்டு பாவனை செய்யச் சொல்லுறியளோ. நாளைக் கடத்த வேண்டிய அவசியம் இல்லை. நாளைக்கே எங்கிடை போராட்டம் துவங்குது. சனத்தின்ரை ஆதரவு எங்களுக்கு நிறைய இருக்குது.

சிவக் : அது எங்களுக்கு வடிவாய்த் தெரியுது. இப்பவே அவங்கள் ஜீப்பிலை அங்காலையும் இங்காலையும் ஓடித் திரியுறாங்கள். நான் சொல்லிப் போட்டன். றோட்டிலை உன்னைக் கண்டனோ எண்டால் கால் அடிச்சு முறிப்பன்.

சந்திரன் : உங்களை மாதிரி ஆக்களை மாத்திரமில்லை எங்களைத் தடுக்கிறதுக்குச் சதி செய்யிற எல்லாரையும் அடிச்சு முறிக்கத்தான் நாங்கள் இருக்கிறம்.

சிவக் : முறிப்பியள். அது எனக்கு வடிவாய்த் தெரியும். இப்பிடி முறிக்க வெளிக்கிட்டவை கனபேர். வாங்கிற அடியிலை கண் இருளேக்கை எல்லாம் வடிவாய்த் தெரியும்.

சந்திரன் : அடிக்கு நாங்கள் பயப்படுகிற ஆக்கள் இல்லை. தெளிஞ்ச சிந்தனைகளை கையிலை ஆயுதமாய்ப் பிடிக்கிற எவைக்கும் உலகம் எண்டைக்குமே இருளாது பெரியையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி : இதுகளெல்லாம் அவருக்கு வடிவாய் விளங்கும். ஆனால் ஒரு குடும்பத்தைப் பார்க்க வேணும் எண்டது விளங்காது.

சந்திரன் : ஏன் விளங்காது. விளங்கினதின்ரை முதல்ப் படிதான் இது.

சிவக் : எது? முதுகு முறியிற வழியோ. உனக்கு மானம் ரோசம் எண்டு ஒண்டிருந்தால் நீ இப்படிக் கதைச்சுக் கொண்டிருப்பியே.

செல்வி : மானத்தையும் ரோசத்தையும் பற்றி நீங்கள் ஏன் அவருக்குச் சொல்லுறியள்.

சந்திரன் : செல்வி... ...

செல்வி : அதைப்பற்றிக் கதைச்ச உடனை தானே உங்களுக்கும் ரோசம் வருகுது.

கார்த்தி : எல்லாரும் அவனைப் பேசினால் அவனும் என்ன செய்யிறது. வேலை செய்யிறதுக்கு ஒரு இடமெல்லோ வேணும்.

செல்வி : இடம் ஏன் இல்லை. மனம் இருந்தாலெல்லோ.

சிவக் : (கார்த்திகேசுவைப் பார்த்து) நீ தான் அவனைக் கெடுக்கிறது. (சந்திரனைப் பார்த்து) டேய் உத்தியோகம் புருஷ லட்சணம். நாலு பேர் மதிக்கத் தக்கதாய் சீவிக்க வேணும் எண்டால் நாலு காசு உழைக்க வேணும்.

கார்த்தி : அதை அவன் இல்லையெண்டோ சொல்லுறான் அண்ணை. உத்தியோகம் கிடைச்சால்தானே.

செல்வி : (இடைமறித்து) இப்ப எத்தினை இன்ரவியூவுக்கு மாமா அவர் போறவர்.

சிவக் : ஆக கவுண்மேந்து உத்தியோகம் தானோ உத்தியோகம். நான் கவுண்மேந்திலை இருந்து உழைச்சதிலையும் பாக்க வெளியிலை இருந்து கொண்டு உழைச்சதுதான் கூட.

சந்திரன் : அது நீங்கள் எல்லோ.



சிவக் : நான் எண்டால் நீ இப்ப பிறத்தியோ. வயல் வெளி கிடக்குது. உத்தியோகம் கிடைக்கும் வரைக்கும் அதைச் செய்தால் என்ன.

சந்திரன் : ஏன் செய்ய வேணும். வயல் செய்யவே ஐயா என்னை யுனிவேசிற்றிக்கு அனுப்பிப் படிப்பிச்சவர்.

சிவக் : அது அறிவுக்கு.

சந்திரன் : அறிவுக்கு இவ்வளவு காசு சிலவழிச்சு யூனிவேசிற்றிக்குப் போய்ப் படிக்க வேணுமோ. வீட்டிலை இருந்து படிச்சிருக்கலாமே. இந்த ஏழைகள் எல்லாம் இவ்வளவு கஸ்டப்பட்டு தங்கிடை பிள்ளைகளை யூனிவேசிற்றிக்கு அனுப்பிப் படிப்பிக்கிறது அறிவுக்காகத்தானோ. ஏன் பெரியையா உங்களை நீங்களே ஏமாத்திறியள்.

செல்வி : அவரைப்பற்றி நாங்கள் கதைச்சால் அவர் வேறை ஆரையும் பற்றிக் கதைப்பார். (உறுதியாக) இனி என்னாலையும் இஞ்சை இருக்க ஏலாது.

கார்த்தி : (திடுக்கிட்டு) செல்வி ... ...

செல்வி : உத்தியோகம் வரும்... நல்ல வாழ்க்கை வரும் எண்டு நானும் என்னை ஏமாத்த விரும்பேல்லை.

கார்த்தி : (அந்தரத்தோடு) செல்வி நீ ஒண்டுக்கும் அவசரப்படாதை மோனை. அது எல்லாம் நல்லபடிக்கு வரும்.

செல்வி : நல்லபடி என்ன மாமா நல்லபடி, உங்களுக்கு இருக்கிற இந்த அந்தரம் அவருக்கு இல்லை...

சந்திரன் : ஏன் செல்வி... ... என்னையும் உணர்ச்சிக்கு அடிமைப்படச் சொல்லுறியோ.

சிவக் : உனக்கு அது இருந்தால் எல்லோ நீ அதுக்கு அடிமைப்பட, அது செல்வி சொல்லுறது சரி. இதை இப்பிடியே விட ஏலாது. இரண்டிலை ஒரு முற்றுத் தெரியவேணும். உத்தியோகம் தான் இல்லாட்டிலும் வயல் எண்டாலும் செய்யப்போறியோ இல்லையோ.

சந்திரன் : வயலிலை வேலை செய்யிறதுக்கு எனக்கு எந்தவிதமான மறுப்புமில்லை. அதை நான் செய்ய செல்வி முதல் சம்மதிக்க வேணும். அது மாத்திரமில்லை. இவளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் செல்லனும் உங்கிடை வயலிலைதான் வேலை செய்தவன். கடைசியிலை இருக்கிறதுக்கும் இட-மில்லாமல் றோட்டிலை நிண்டதுதான் அவன்ரை உழைப்புக் கண்ட மிச்சம். அதுதான்... உண்மையாய்க் கஸ்டப்பட்டு உழைக்கிறவனை ஒரு கொஞ்சமும் உய்ய விடாமல் அவனைச் சுறண்டிச் சீவிக்கிறவைக்கு அனுகூலமாயிருக்கின்ற இந்த அமைப்புச் சீவிக்-கிறவைக்கு அனுகூலமாயிருக்கின்ற இந்த அமைப்புக்-குள்ளை அதை நான் செய்யத் தயாராயில்லை.

சிவக் : (கடுமையாக) வேறை எதுக்குள்ளை செய்யப் போறாய்.

கார்த்தி : கொஞ்சம் தன்மையாய்ச் சொல்லுங்கோவன் அண்ணை.

சந்திரன் : எப்பிடித்தான் சொன்னாலும் என்ரை முடிவு ஒண்டு-தான். வேறை உத்தியோகம் குடுக்கிறதுக்கு வழி தெரியாட்டில் வயலுக்குப் போ எண்டு சொல்லுறது தான் இப்ப வளக்கம். அப்பிடிச் சொல்லுறது உன்மேலை இந்தப் பிரச்சனையிலை இருந்து தப்பி ஓடுறதுக்கு வழியே தவிர அதைத் தீர்க்கிறதுக்கு வழியில்லை. வேறை உத்தியோகம் இல்லை எண்டதுக்காக நான் வயலுக்குப் போகமாட்டன். உத்தியோகம் இல்லாதவை எல்லாரும் கமத்துக்குப் போறதாலை வேலை இல்லாத பிரச்சினை தீராது.

கார்த்தி : நெடுக உன்னை வயலிலை நிக்கச் சொல்லி நாங்கள் சொல்லேல்லையே மோனை.

சந்திரன் : நெடுகவோ கொஞ்ச நாளைக்கோ ஐயா. அது ஒரு நிரந்தரமான தீர்வைத் தராது.

சிவக் : ஏன் தராது.

சந்திரன் : உங்களிட்டை வயல் இருக்குது. அதை எனக்குக் காட்டுறியள். இதே தங்கிடை பிள்ளைகளுக்கும் காட்ட இஞ்சை இருக்கிற ஏழைகள் எல்லாரிட்டயும் நில புலம் இருக்குதோ.

சிவக் : அவேற்றை இருக்கிறது இல்லாதது பற்றி உனக்கென்ன கவலை.



கார்த்தி : அதுகளைப் பற்றி நாங்கள் கவலைப்பட்டு என்ன மோனை செய்யிறது.

சந்திரன் : உங்களுக்கு அவையைப் பற்றி அக்கறைப்பட விருப்ப-மில்லாட்டிலும் ஐயா... ... ஏதோ வழியிலை அதெல்லாம் உங்களையும் பாதிக்கத்தான் செய்யுது. உண்மை-யிலைபடிச்சு வேலை இருக்கிறவையிலும் பார்க்க படியாத ஏழைகள் தான் கூடப்பேர் வேலை இல்லாமல் இருக்கினம். சொந்தமாய் வயல்வெளி இல்லாத சனம் எத்தினை. மூண்டு மாதத்துக்கு வயலிலை வேலை செய்து போட்டு மிச்ச நாளைக்கு அரை வயித்தோடை வீட்டுத் திண்ணையில் ஏங்கிக்கொண்டு இருக்கிற சனம் இன்னும் எத்தினை... ... ஆக நீங்கள் எனக்குக் காட்டுற வழி... ... ஒரு வேலையில்லாத இடத்திலை இருந்து வேறை ஒரு வேலை இல்லாத இடத்துக்குப் போகச் சொல்லுறியள். இதாலை பிரச்சினை தீரப்போறேல்லை.

சிவக் : அப்ப நீ போகமாட்டாய். இந்த முடிவுக்கு நீ முந்தியே வந்திட்டாய். அப்பிடித்தானே.

சந்திரன் : ஓம்... ... அந்த முடிவை மாற்றவும் ஏலாது.

சிவக் : (கடும் கோவம் கொண்டவராய்) வேலை செய்யிறதுக்கு ஆசைப்படுகிறான். பாவம், வேலை இல்லை. வந்த உடனை போவான் எண்டுதான் நான் இவளவு காலமும் நம்பியிருந்தன். ஆனால் இப்பத்தான் தெரியுது உனக்கு வேலைக்கே போக விருப்பமில்லை எண்டு. அவனையும் இவனையும் சாட்டிக் கொண்டு சும்மா இருந்து நீ சீவிக்கப் பார்க்கிறாய்.

சந்திரன் : (பொறுமை இழந்தவனாக) இவ்வளவு நேரமும் நான் சொன்னது உங்களுக்கு விளங்கேல்லை எண்டால் நீங்கள் வீட்டை போறதுதான் புத்தி.

சிவக் : (ஆத்திரத்தோடு முன்னேறி) என்னடா சொன்னனீ... ...

கார்த்தி : அண்ணை... ... பொறுங்கோ (அவரை மறித்து, சந்திரனை நோக்கி) உனக்குப் பெரியவையோடை எப்பிடிக் கதைக்கிறதெண்டு தெரிய வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் : பெரியவை... ... மற்றவையின்ரை இரத்தத்திலை ஊதிப் பெருக்கிற இவை திருந்துவினம் எண்டு நான் நினைச்சது பெரிய பிழை.

சிவக் : நீர் இப்ப என்னைத் திருத்த வெளிக்கிட்டிட்டீரோ? அந்த அளவுக்கு நீர் இப்ப வளந்திட்டீரோ. சொந்த மனிசிச் சோறு போட ஏலாது என்னைத் திருத்துகிறார்.

சந்திரன் : உங்கிடை அலுவலை நீங்கள் பாத்துக் கொண போங்கோ என்ரை அலுவலைப் பாக்க எனக்கு தெரியும்.

சிவக் : உன்ரை அலுவல் என்னடா உன்ரை அலுவல்.

கார்த்தி : (சந்திரனை நோக்கி) டேய்... ... (சிவக்கொழுந்துவிடம்) அவன் தான் சின்னப் பொடியன் எண்டால் நீங்கள் பெரியவையும்... ...

சிவக் : (ஆத்திரம் தாங்காதவராய்) நான் என்ன முகத்தோடை வெளியிலை திரியுறது. சிற்றம்பலத்துக்கு நான் என்ன மறுமொழி சொல்லுறது. உனக்கும் அவளுக்கும் மானம் ரோசம் இல்லையெண்டால், எனக்கும் அப்பிடியே. என்ரை கௌரவம் என்னாகிறது. சொன்ன சொல்லை நான் காப்பாத்த வேணும்.

கார்த்தி : அதுக்கிப்ப என்ன செய்யிறது... ...

சிவக் : எனக்கிப்ப இரண்டிலை ஒண்டு தெரிய வேணும். அவன் இப்ப வேலை செய்யப்போறானோ இல்லையோ.

கார்த்தி : வேலை கிடைச்சால் போவான் தானே.

சந்திரன் : (ஆத்திரத்தோடு) வேலை கிடைக்கிறது ஐமிச்சம் எண்டு மாமாட்டைச் சொல்லுங்கோ... ... போங்கோ... ...

சிவக் : நீர் சொல்லிப் போட்டீர்... ... நான் போய்ச் சொல்ல வேணும். ஆர் எண்டு என்னை நீ நினைச்சாய்... ராஸ்கல்... உன்ரை கொழுப்பை நான் அடக்கிறேனோ இல்லையோ எண்டு பார்... ... ... உன்னைக் கூலி வேலை செய்ய வைக்கிறேனோ இல்லையோ எண்டு பார்... ...

(வேகமாக வெளியேறுகிறார். கார்த்திகேசு மறிக்க எத்தனிக்கிறார். ஆனால் அவர் கோபத்தோடு விலத்திச் சென்று விடுகிறார் கதவடியில் சோகமாக கார்த்திகேசு நிற்கிறார். நடந்தது எல்லாவற்றையும் பார்த்த செல்வி பொறுக்க முடியாதவளாய்)



செல்வி : போதும்... ... என்னாலை இனிப் பொறுக்க ஏலாது... ... மேடைப் பொருளாய் என்னை வைச்சுக்கொண்டு என்னைச் சுற்றி ஆடின நாடகம் போதும்... ... அவரவற்றை ஏலாத்தனத்துக்குள்ளை கிடந்து கொண்டு என்னாலை சாக ஏலாது...

சந்திரன் : (உணர்ச்சி வசப்பட்டவனாய்) செல்வி அவை வயசு போனவை... நாங்கள் அப்பிடியில்லை... ... எங்களிலை புது இரத்தம் ஓடுது. பழைய வழியிலையே வாழ்க்கையைப் பாராமல்... ... வழியிலை... ... அதை முழுசாய்... ... நேர்மையாய்ப் பாப்பம்... ...

செல்வி : பாத்தது போதும்... ... இனியும் என்னாலை பாத்துக்கொண்டு இருக்க ஏலாது.

கார்த்தி : (சோகத்துடன்) செல்வி... ... நீ படிச்சனி... ... மற்றவையை விட... ... உனக்குத்தான் இந்தப் பிரச்சனை கூட விளங்கவேணும்... ... எங்கிடை விருப்பத்தோடையோ இதெல்லாம் இப்பிடி நடக்குது... ... என்ன செய்யிறது... ... கலியாணம் முடிச்சதுக்காக உன்னைக் கஸ்டப்படு என்று நான் சொல்லேல்லை. நீ சந்தோசமாய் இருக்க வேணும்... ... நீ குடும்பத்தை நல்லபடி நடத்தவேணும்... ... அப்பிடி நீ விரும்பிறது சரி... ... அதை நான் பிழை எண்டு சொல்லேல்லை... ... ஆனால்... .... அவன்... ... அவன்தான் என்ன செய்யிறது... ... சில வேளைகளிலை... ... பொறுப்பில்லாமல் திரியுறான் எண்டுதான்... ... எனக்கும் படுகுது... ... அதே நேரத்திலை... ... அவன் சொல்லுறதும் சரிபோலத் தான் எனக்குப் படுகுது... ... இப்பிடியே எல்லாம் நடந்துகொண்டு போகப் போகுதே... ... எல்லாம் நல்ல படிக்கு வரும்... ... மனத்தைரியம் வேணும்... ... நீ தான் கொஞ்சம் பொறுமையாய் இருக்க வேணும்.

செல்வி : இவ்வளவு காலமும் நான் எப்பிடி இருந்தனான்... ... அப்பிடி இருந்ததாலை என்ன சுகத்தை நான் அனுபவிச்சுப் போட்டன். பொறுமையையும்... ... தியாகத்தையும்... ... என்னட்டைத்தானே எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கிறியள் கடமை எண்டது எல்லோருக்கும் பொதுத்தானே. அவரும் தன்ரை கடமையைச் செய்யத்தானே வேணும்.

சந்திரன் : என்ரை கடமையை நான் செய்யத்தான் வேணும். ஆனால் எப்படிச் செய்யிறது. என்ரை சுயநலத்துக்காக மனச்சாட்சிக்கு எதிராய்.... சரியான பாதைக்கு எதிராய்ப்... ... போகச் சொல்லுறியா? என்னாலை அது ஏலாது.

(இந்த நேரத்தில் சிவக்கொழுந்தும் சிற்றம்பலமும் உள்ளே பிரவேசிக்கிறார்கள்.)

சிற்றம் : (கார்த்திகேசுவிடம்) நடந்ததெல்லாம் நான் கேள்விப்பட்டன். நல்ல முறையிலை என்ரை மகளைப் பாப்பியள் எண்டுதான் நான் அவளை இஞ்சை கட்டி வைச்சனானே தவிர அவளை இப்பிடிப் போட்டு வருத்துவியள் எண்டு நான் நினைக்கேல்லை.

கார்த்தி : அவளுக்கு எந்தவிதமான ஒரு குறையும் நான் வைக்கேல்லைப் பாருங்கோ. சந்திரனுக்கு வேலை இல்லை எண்டதுதான் ஒரு பெரிய குறை.

சிற்றம் : என்னதான் நீங்கள் சொன்னாலும் அந்தக் குறையை இல்லாமல் செய்திருக்க வேணும். செய்வியள் எண்ட நம்பிக்கேலைதான் நான் கலியாணத்துக்குச் சம்மதிச்சனான். இப்ப நாளைக்கெண்டு நாலு வருசமாச்சுது. உந்தச் சித்திரவதையுக்கை இருந்து இருந்து அவள் சாக நான் விரும்பேல்லை. நான் அவளை வீட்டை கூட்டிக்கொண்டு போகப்போறன்.

சந்திரன் : அதை என்னட்டை நீங்கள் கேக்க வேணும். ஓம் எண்டு சொல்ல வேண்டியவன் நான். நீங்கள் உடனை வந்து கூட்டிக்கொண்டு போறதுக்கு நான் அவளைக் கலியாணம் செய்யேல்லை.

சிவக் : அவளை இஞ்சை வைச்சுக் கொஞ்சம் கொஞ்சமாய் சாகடிக்கிறதுக்கோ நீ அவளைச் செய்தனி... ...

சந்திரன் : இதெல்லாம் உங்கிடை வேலை எண்டு எனக்கு வடிவாய்த் தெரியுது. நான் இதிலை ஒண்டும் கதைக்க விரும்பேல்லை. அவளுக்கு விருப்பமெண்டால் போகட்டும்.



சிவக் : அவளின்ரை விருப்பத்தை இப்பத்தானோ பாக்கிறீர். இவ்வளவு காலமும் என்ன செய்தனி?

சிற்றம் : என்னோடை இருக்கும் வரைக்கும் ஒருநாளாவது அவள் கண்கலங்கி இருக்கமாட்டாள். என்ன செய்யிறது பட்டதெல்லாம் போதும். நீ வா மோனை.

(செல்வி தகப்பனுக்குக் கிட்டே போகிறாள். இதைச் சந்திரன் பார்த்தபடியே நிற்கிறான். பிறகு ஆறுதலாக)

சந்திரன் : செல்வி அவசரப்பட்டு... ... உன்ரை வாழ்க்கையை நீயே பழுதாக்காதை. நீ இப்ப எடுக்கிற முடிவு உன்ரை வாழ்க்கையைப் பிறகு பாதிக்கப்போகுது. அதுக்காகப் பிறகு நீயே கவலைப்படுவாய்.

செல்வி : உங்களோடை இருந்த இவ்வளவுகாலமும் என்ரை வாழ்க்கை சந்தோசமாய் இருந்ததெண்டாப் பரவாயில்லை. இஞ்சை இருந்து வாழ்க்கை முழுக்கக் கவலைப்படப்போற நான்... ... என்ரை ஒரு முடிவுக்காக அங்கை இருந்து கவலைப்படுகிறதாலை எந்தவிதமான நட்டமுமில்லை.

சந்திரன் : செல்வி... ... ...

கார்த்தி : (இடைமறித்து) நீ ஏன் அவளைத் தடுக்கிறாய். இஞ்சை இருந்து அவள் கண்ட சுகம் ஒண்டுமில்லை. அவள் இஞ்சை இருந்து கவலைப்படுகிறதிலையும் பாக்க... ... கொஞ்ச நாளைக்கெண்டாலும் அவரோடை நிம்மதியாய் இருக்கட்டுமன்.

சந்திரன் : செல்வி... ... நீ நாலுபேற்றை புத்தியைக் கேட்டுக்கொண்டு போறாய்... ... சரி போ... ... நீ நினைக்கிறாய் அப்பாட்டைப் போனால் உன்ரை பிரச்சனை தீருமெண்டு. ஆனால் இனித்தான் உனக்கு வாழ்க்கேலை பிரச்சனை ஆரம்பமாகுது.

செல்வி : இவளவு காலமும் வாழ்க்கை எனக்குப் பிரச்சனையாய்த் தானே இருந்தது. இதொண்டுதான் புதிசாய் இருக்கப் போகுதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் : (ஆறுதலாக) செல்வி... ... என்னை ஒரு வேலைக்குப் போகப் பண்ண வேணும் எண்ட உன்ரை வேகம் இன்னும் கன புதுக் கரைச்சல்களுக்கை உன்னைக் கொண்டுபோய் மாட்டும். ஒரு கரைச்சலிலை இருந்து தப்பி ஓடினால் அந்தக் கரைச்சல் தீர்ந்துபோகும் எண்டு நீ நினைக்கிறது எவளவு மடத்தனம். அப்பிடித்தான் நீ தப்பி ஓடினாலும்கூட என்ன சொர்க்கத்துக்கோ போய்ச் சேரப் போறாய்? இல்லைத் தானே. பிறகும் வேலை செய்து பிழைக்கிறதுக்கு வழி இல்லாத இந்த நாட்டிலை-தானே நீ தனியாய்ச் சீவிக்கப் போறாய். ஆனால் ஒண்டை மட்டும் நீ வடிவாய் உணர்ந்துகொள். அப்பாவோடை நீ போனாப்போலை எனக்கு உத்தியோகம்' கிடைக்கப்போறேல்லை.

செல்வி : (குழம்பிய தன்மை முகத்தில் தெரிய இயலாத்-தனத்தோடு) என்னை என்ன செய்யச் சொல்லுறியள். என்னை ஏன் இப்பிடிப் போட்டுக் குழப்பிறியள். எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை.

சிவக் : சரி சரி... வாருங்கோ... ...

(சிவக்கொழுந்தர், சிற்றம்பலம் ஆகிய இருவரும் கதவுப்பக்கம் திரும்பி இரண்டொரு அடி எடுத்து வைக்கிறார்கள். செல்வி அசையாது குழம்பியபடியே நிற்கிறாள். அப்பொழுது வீதியிலே சிலர் குழப்பமாக ஓடுவதும், ஓரிருவரைப் பொலிஸ் துரத்துவதும் தெரிகிறது. இந்தக் குழப்பத்தோடு மூவர் கதவைத் திறந்தபடி உள்ளே ஓடி வருகிறார்கள். ஓடிவந்தவர்களுள் இருவர் இரைக்க இரைக்க கதவுக்கும் ஜன்னலுக்கும் இடையில் விழ மற்றவன் தலையைப் பிடித்தப்படி ஜன்னலுக்கூடாக எட்டிப்பாக்கிறான். இவர்கள் மூவருடைய தலையிலிருந்தும் இரத்தம் வழிகிறது. இந்தக் குழப்பத்திடையே)

சந்திரன் : (விழுந்த ஒருவனைத் தூக்கியபடியே) கந்தசாமி... ... கந்தசாமி... ... ஐயா மருந்தும் பஞ்சும் கொண்டு வாருங்கோ. கெதியாய்.

(அவனைக் கிடத்திவிட்டு உள்ளே ஓடுகிறான். செல்வி, சிற்றம்பலம் ஆகியோர் திகைத்தபடி நிற்க சிவக்கொழுந்து ஆட்கள் ஆர் எண்டு அளவெடுக்கிறார். சந்திரன் சில பழந்துணிகளோடு உள்ளே ஓடிவருகிறான். வந்து அவர்களுடைய காயங்களைத் துடைக்கிறான்.



தகப்பன் அவர்களுடைய முகத்திற்கு தண்ணீர் தெளிக்க சிறிது நேரத்திற்குப் பின் அவர்கள் எழுந்து மேடையில் உட்காருகிறார்கள். அவர்களின் காயங்களுக்கு மருந்து போட்டபடியே)

சந்திரன் : என்ன கந்தசாமி நடந்தது.

கந்தசாமி : நாளைக்கு... ... ஊர்வலத்தைப் பற்றிச் சந்தியிலை கதைச்சுக்கொண்டு நிண்டம்... ... ஒரு ஜீப் வந்து நிண்டுது ஒருத்தன் இறங்கி வந்து... ... சந்தியிலை நிற்கவேண்டாம்... போங்கோ... ... எண்டான்... ... நான் சொன்னன்... ... எங்களுக்குக் கதைக்க கொஞ்சம் விஷயமிருக்கு... ... கதைச்சுப்போட்டுப் போறம் எண்டு... ... உடனை அவன் விசிலை எடுத்து ஊதினான். ஜீப்பிலை இருந்தவங்கள் எல்லாம் இறங்கி ஓடிவந்து எங்களுக்கு அடிக்கத் துவங்கினாங்கள். நாங்களும் திருப்பி அடிச்சம். ஆனால் அவங்கிடை கையிலை பொல்லு... எல்லாரும் ஓடினம்... ... கலைச்சுக் கலைச்சு அடிச்சாங்கள்...

கார்த்தி : சந்தியிலை நீங்கள் நிண்டால் அவங்களுக்கு என்னவாம்.

காயக்காறன்: 3: இண்டைக்கு றோட்டிலை பொலிஸ் காவல் கூட.

(முன்னர் சொன்ன விபரிப்பைக் குழப்பத்தோடு ஒன்றும் புரியாத பாவனையோடும் கேட்ட செல்வி)

செல்வி : (காயக்காறன் 3ஐ இடைமறித்து) ஏன்?

(இந்த நேரம் மீண்டும் ஆட்கள் அங்கும் இங்குமாக ஓடுகிறார்கள். சந்திரனும் மற்ற இருவரும் எழுந்து ஜன்னலுக்கூடாக நின்றபடியே பார்க்கிறார்கள். செல்வி இவர்களைத் தாண்டி ஜன்னலுக்கு ஓடுகிறாள். ஜன்னலுக்கூடாகப் பூந்து பூந்து பார்க்கிறாள். பார்த்தவள் திடீரெண்டு கத்துகிறாள். அவளுடைய வசனத்தின்போது பார்வை-யை ஜன்னலூடாக எடுக்காது நடப்பதை விபரிக்கிறாள்.)

செல்வி : (பூந்து பூந்து பார்த்தவள் திடீரென்று அதிர்ச்சியான குரலில் அந்தரத்தோடு) மாமா... மார்க்கண்டு... மாமா... மார்க்கண்டு ஓடுகிறான் மாமா... பின்னாலை பொலிஸ்... பொலிஸ்... துரத்துகிறான்... கிட்டப் போட்டான்... மார்க்கண்டு... பொலிஸ்... பின்னாலை பொலிஸ்... மார்க்கண்டு... ஓடு... பின்னாலை... கெதியாய் ஓடு... ஓடு... ஐயோ... அவன் விழுந்திட்டான்... எழும்பு... டேய் எழும்படா... பொலிஸ்... எழும்பு... பொல்லு... ஐயோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டு... மார்க்கண்டு... (அதிர்ச்சியோடு).... இரத்தம்... இரத்தம்... மார்க்கண்டு... இரத்தம் (அதிர்ச்சி யோடு சத்தத்தைக் குறைத்து).... மார்க்கண்டு ஓடுறான்... இரத்தத்தோடை ஓடுகிறான்.

(சிலையறைந்தவள் போல் ஜனன்லுக்கூடாகப் பார்த்தபடியே நிற்கிறாள். மேமடை மௌனமாக இருக்கிறது. கந்தசாமியும், காயக்காரர் - 2 உம் மேடையில் மீண்டும் இருக்கிறார்கள். சந்திரன் குனிந்தபடியே கந்தசாமியின் காயத்தைச் சுற்றிச் சீலை கட்ட ஆரம்பிக்கிறான். கார்த்திகேசு மற்றவனுக்கு மருந்து போடுகிறார். இது மௌனமாக நடக்க, குழப்பமான முகத்தோடு செல்வி ஜன்னலடியிலிருந்து திரும்புகிறாள். மெல்ல நடந்து சந்திரனுக்குக் கிட்ட வருகிறாள். சில வினாடிகள் குழம்பிய முகத்தோடேயே நின்று பின் சந்திரனிடம்,

செல்வி : ஏன் மார்க்கண்டுவுக்கு இரத்தம்.

(சந்திரன் குனிந்தபடியே அவனைத் திரும்பிப் பார்க்கிறான். சில வினாடிகளுக்குப் பின் ஒன்றும் பேசாது மீண்டும் மருந்தைக் கட்டுகிறான். செல்வி மீண்டும் சந்திரனைப் பார்த்தபடியே).

செல்வி : சொல்லமாட்டியளோ ஏன் மார்க்கண்டுவுக்கு அடி விழுந்தது எண்டு.

சந்திரன் : (நிமிர்ந்து செல்வியைப் பார்த்தபடி ஆறுதலாக) எங்களைப்போல அவனுக்கும் வேலை இல்லை.

(குழப்பநிலை கலைந்து திகைத்தபடியே அவள் நிற்க சந்திரன் மீண்டும் தலையைக் கட்டுகிறான். அப்போது)

சிவக் : வேலையில்லையோ... ... திண்டு போட்டுத் திமிர் எடுத்தால் வாங்கி முறியத்தானே வேணும்.

கா.காறன்3: வாங்கி முறியிறதோ... ... உங்களைப்போல ஆக்களை வேரோடை பிடுங்கி எறியக் கனகாலமில்லை.

சிவக் : என்னடா சொன்னனீ... ... ராஸ்கல்.

(அடிக்கத் தடியை ஓங்கியபடியே முன்னேறுகிறார். அந்த நேரத்தில் தன்னை அறியாமலே அவள் அவரைத் தடுத்தபடி)

செல்வி : மாமா... ...

சிவக் : ராஸ்கல்... ... கண்ட நாய்களையும் வீட்டுக்கை விட்டுக்கொண்டு.



(போவதற்குத் திரும்புகிறார். கதவடிக்குப் போய் சிற்றம்பலத்திற்குத் தலை ஆட்டுகிறார்).

சிற்றம் : செல்வி... ... வா போகலாம்.

செல்வி : (யோசித்தபடியே) நான் வரேல்லை... ... நீங்கள் போங்கோ அப்பா.

(சந்திரனும் தகப்பனும் நிமிர்ந்து ஆச்சரியத்தோடு அவளைப் பார்க்கின்றனர்)

சிற்றம் : உனக்கென்ன விசரே.... .... வா செல்வி,

செல்வி : இல்லை நான் வரேல்லை... ... நீங்கள் போங்கோ,

(சிவக்கொழுந்தும் சிற்றம்பலமும் அவளைக் கோபத்தோடு சிறிது நேரம் பார்த்தபடியே நிற்கின்றனர். பின்னர் சிவக்கொழுந்து சிற்றபம்லத்தின் கையைப் பிடித்து இழுத்தபடியே,)

சிவக் : நீ வா சிற்றம்பலம் .... ... அவள் உதுக்கை கிடந்து சாக வேணுமெண்டால் சாகட்டும்.

(சிற்றம்பலமும் சிவக்கொழுந்தும் வெளியேறுகிறார்கள். சந்திரனும் கார்த்திகேசரும் மீண்டும் கட்டத் தொடங்குகிறார்கள். செல்வி மேடையில் இருக்கும் மருந்துப் போத்தலையும் பஞ்சையும் எடுத்துக் காயக்காறன் - 3 இற்குப் போட்டபடி பாடுகிறாள்.)

செல்வி : உழைப்பதற்கு வலுவிருக்க; உள்ளத்தில் திடமிருக்க பிழைக்க வழி ஏன் இல்லை, பேசுங்கள் தோழர்களே

சந்திரன் : பிழைக்க வழி இல்லாத பிற்போக்கு நிலைமை இங்கு விளைக்க நிலம் இல்லாத வேதனையால் தோழர்களே.
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .... ... ... ... ... ... ... ... ...

செல்வி பாடத் தொடங்க, முன்னர் வந்த பாட்டை சந்திரன் மறுமொழியாகப் பாடுகிறான். பின்னர் மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள். தொடர்ந்து மேடைக்கு வெளியே உள்ளவர்களும் சேர்ந்து உரத்துப் பாடுகிறார்கள். சிறிது நேரத்துக்குப்பின் செல்வியும் மேடையில் நிற்கும் மற்றவர்களும் பாடாது மருந்து போடுவது, கட்டுவது போன்று பாவனை செய்கிறார்கள். ஒளி மங்கி மறைந்து திரை மூடிச் சிறிது நேரம்வரை இந்தப்பாட்டு இசைக்குழுவினரால் இசைக்கப்படுகிறது.

**மூன்றாம் அங்கம் முடிவு**

**முற்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Printed by Kumaran Press Private Limited**
**e-mail: kumbh@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOOK
L A B
Rs.